ணன் அவளை எடுத்துச்செல்லுவான்" என்று யோசித்தான். இராமருடைய ஒப்பற்ற பாணத்தால் பிளக்கப்பட்ட மாரீசன் மானுருவத்தைவிட்டு, உண்மையான தனது ராக்ஷச உருவத்தைக் கொண்டு, பெரிய சரீரத்தை அடைந்து பிராணனை விடுபவன் இராமருடைய குரலால் "ஓ சீதா! ஓ லக்ஷ்மணா!" என்று பெருஞ்சத்தமாய்க் கதறினன். அப்பொழுது அவன் அழகான கேயூரங்களும் பொன்மணி மாலைகளும் விளங்க, கோரப்பற்கள் தோன்ற, அரக்கர்களுக்குரிய பயங்கரமான உருவத்தை அடைந்து, மாண்டு பூமியில் விழுந்து, தேகமெல்லாம் இரத்தமொழுக வெறுந்தரையில் புரண்டுகொண்டிருந்ததை இராமர் கண்டு, லக்ஷ்மணன் சொன்னது நிச்சயமாய்விட்டதென்று தெரிந்து, மனத்தில் சீதையைக்குறித்து நினைத்தார்.

இராமர் விசாரம்.

"இது மாரீசனுடைய மாயை. லக்ஷ்மணன் இதை முன்னமே அறிந்து சொன்னன். அவன் சொன்னபடி இப்பொழுது நான் கொன்றது மாரீசன். ஐயோ இவன் 'ஓ சீதா, ஓ லக்ஷ்மணா' என்று பெருஞ்சத்தமாய்க் கூச்சலிட்டு மாண்டான்! இதைக்கேட்டுச் சீதை என்ன செய்வாளோ தெரியவில்லை! வெகு பராக்கிரமசாலியாகிய லக்ஷ்மணன் யாது செய்வான்?" என்று சிந்தித்துக்கொண்டிருக்கையில் தர்மாத்துமாவான இராமருக்குத் தேகம் மயிர்க்கூச்செறிந்தது. மானுருவங்கொண்ட மாரீசனைக் கொன்று, அவன் கூவின பெருஞ்சத்தத்தைக் கேட்கவே, இராமருக்குக் கடுந்துயர் தோன்றிப் பெரும்பய முண்டாயிற்று. அவர் உடனே அவ்விடம்விட்டு நீங்கி, வழியில் மற்றொரு மானைக் கொன்று, அதன் மாமிசத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, ஆச்சிரமத்தை நோக்கி வெகு வேகமாகச் சென்றார்.

நாற்பத்தைந்தாஞ்சருக்கம்.

சீதை இராமரைத் தேட லக்ஷ்மணரை அனுப்புதல்.

தனது நாயகனுடைய குரல்போன்ற அந்தப் பரிதாபமான கூச்சலைக்கேட்டுச் சீதை லக்ஷ்மணரைப் பார்த்து "இராகவருக்கு என்ன நேர்ந்தது என்று போய்ப்பாரும். அவர் கதறினதைக் கேட்டு எனது இருதயமும் உயிரும் தம்முடைய நிலையில் நிற்கவில்லை. காட்டில் கதறும் உமது தமையனரைக் காப்பாற்றுவது உமது கடமை. உமது உதவியை வேண்டி நிற்கும் உம்முடைய தமையனரைத்தேடி உடனே செல்லும். இடபம் சிங்கத்தினிடத்தில் சிக்கிக்கொண்டதுபோல் அவர் அரக்கர்கள் வசம் அகப்பட்டுக்கொண்டார்" என்றாள். அவள் அவ்வாறு சொன்னபோதிலும், தமது தமையன் கட்டளையை நினைத்து லக்ஷ்மணர் புறப்பட்டுப் போகவில்லை. அதைக்கண்டு சீதை வெகு கோபங்கொண்டு "சுமித்திரைபுத்திர, இந்த ஸ்திதியிலிருக்கும் உமதுதமையனரைத்தேடி நீர்போகாமையால் நீர் அவருக்குச் சகோதர உருவமாகிய சத்துருப் போலும். என் நிமித்தம் நீர் இராகவர் காட்டில் மாண்டுபோகட்டும் என்றிருக்கிறீரோ? என்மேல் வைத்த ஆசையால்தான் நீர் இராகவரைத்தேடிச்செல்லவில்லை. இதனால் இராகவரிடம் உமக்கன்பில்லை என்றும், அவருடைய அழிவை நீர் விரும்புகிறீர் என்றும் தெரியவருகிறது. ஆனபடியால் தான் நீர் விரைந்துசென்று மகாகாந்திபொருந்திய இராகவரைப் பாராமல் இங்கு நிற்கிறீர். யாவரொருவரைத் தொடர்ந்து நீர் இக்காட்டிற்கு வந்தீரோ அவர் நாசமடைந்தபின்பு நான் உயிரோடிருந்து என்ன பிரயோசனம்" என்று இவ்வாறு துயரப்பட்டுக் கண்ணுங்கண்ணீருமாக அழுதுகொண்டு பெண்மான்போல் நடுங்கி நின்

சீதை இராமரைத் தேட லக்ஷ்மணரை ஏவல்.

சீதை கவறுசி.

ருள். அவளைப்பார்த்து லக்ஷ்மணர் "வைதேகி, பன்னகர், அசுரர், கந்தருவர், தேவர், மானிடர், ராக்ஷசர் ஆகிய இவர்கள் ஒருவராலும் உம்முடைய கணவரை வெல்ல முடியாது. இந்திரனுக் கொப்பான இராமர் முன் நின்று போர்புரிய வல்லவர்கள் ராக்ஷசர்கள், பிசாசர்கள், கின்னரர்கள், மிருகங்கள், பயங்கரமான தானவர்கள் முதலியவர்களுள் ஒருவருமில்லை. அம்மா, இராமரைப் போரில் கொல்ல வல்லவர்கள் ஒருவருமிலர். ஆகையால் நீர் இவ்வாறு சொல்லத்தகாது. அன்றியும், இராகவர் இல்லாதபோது நான் உம்மை இக்காட்டில் தனியாய்விட்டுப் போவது சரியன்று. அநேக வீரர்கள் ஒன்றாகக் கூடி வந்தபோதிலும், இம்மூவுலகங்களிலுமுள்ளவர்களோடும் தேவர்களோடும் சேர்ந்து இந்திரனே சண்டையிட வந்தபோதிலும் இராமருடைய பலத்தை அடக்க முடியாது. ஆகையால், உமது உள்ளத்தில துயரம் வேண்டாம்; இவ்விதமான தாபமும் வேண்டாம். அந்தப் பொன் மானைக் கொன்றுவிட்டு உமது கணவர் விரைவில் திரும்பிவருவார். அக்கூச்சல் அவர் குரலன்று; வேறு யாரோ மாயையால் இட்ட சத்தம். அது அவ்வரக்கனுடைய பெருமாயை. கந்தருவநகரத்தைப் போல் விஸ்பிரமம். மகாத்துமாவாகிய இராமர் தாம்திரும்பிவருகிறவரையில் பாதுகாக்கும்படி உம்மை என்னிடம ஒப்பித்தார். ஆகையால, வைதேகி, நான் உமமைவிட்டுச் செல்ல மாட்டேன். அன்றியும், நாங்கள் கரனையும் இந்த ஜனஸ்தானத்திலிருந்த மற்ற இராக்கதர்களையும் கொன்றதனுல் அரக்கர்களைப் பகை செய்துகொண்டோம். துன்பம் செய்வதையே விளையாட்டாக உடைய அரக்கர்கள் இப்பெருங் காட்டில் அநேகவிதமாகக் கூவுகிறார்கள். ஆகையால் இதைப்பற்றி நீர் கவலைப்படவேண்டாம்" என்றார். இவ்

லக்ஷ்மணர் இராமரை வெல்வாரிலை எனல்.

கூக்குரலிட்டது இராமர் அல்ல வெனல.

விதமாக லக்ஷ்மணர் உண்மையை எடுத்துச்சொல்லச் சீதை வெகு கோபங்கொண்டு கண்கள் சிவந்து அவரைப் பார்த்துக் கடுஞ்சொல்லால் "கெட்டவரே! கருணையற்றவரே! கொடியவரே! குடிகேடரே! இராமருக்கு இப்போது நேரிட்ட பெருந்தீங்கு உமக்குச் சம்மதம் போலும். ஆகையாற்றான், அவருக்குத் தீங்கு வந்துவிட்டதென்பதைத் தெரிந்தும் நீர் இவ்வாறு பேசுகிறீர். குரூரமனமும் கெட்ட எண்ணமுமுடைய சத்துருவாகிய உம்மிடத்தில் இவ்விதமான கொடிய செய்கை காணப்படுவது ஆச்சரியமன்று. நீர் தனியே இராமருக்குத் துணையாக வருவதுபோல் எனக்காகவே காட்டுக்கு வந்திருக்கிறீர். அல்லது இவ்வாறு செய்ய இரகசியமாகப் பரதர் உம்மை ஏவியிருக்கலாம். ஆனால், அவ்வாறு நீராவது பரதராவது கொண்டகருத்து நிறைவேறப்போகிறதில்லை. குவளைநிறமும் தாமரை இதழ்போன்ற கண்களுமுடைய இராகவரைக் கணவராகப் பெற்ற நான் மற்றொரு புருஷனைக் கருதுவேனோ! லக்ஷ்மணரே, உமது கண்கள் முன்பாக நான் பிராணனை விட்டுவிடுகிறேன். இதில் ஐயமில்லை. நான் இராகவரையின்றி ஒருநிமிஷமாவது இவ்வுலகத்தில் உயிரை வைத்திருக்கமாட்டேன்" என்றாள்.

சீதை லக்ஷ்மணரைப் பழி கூறல்.

இவ்வண்ணம் மயிர்சிலிர்க்கும்படியான கொடிய வசனங்களைச் சீதைசொல்ல, ஐம்புலன்களையும் அடக்கின லக்ஷ்மணர் கைகுவித்து அவளைப்பார்த்து "அம்மா, நீர்எனக்கு ஒரு தெய்வமாகையால், நான் உமக்கு ஒரு மறுமொழியும் சொல்லக் கூடாதவனாக இருக்கின்றேன். ஓ மைதிலி, நீர் இவ்வாறு அநுசிதமாகப் பேசினது ஆச்சரியமன்று. இது இவ்வுலகத்திலுள்ள மாதர்கள் இயல்பு. அவர்கள் பெரும்பாலும் தருமத்தை அறியாதவர்களும், சபலம் உள்ளவர்களும், கொடியவர்களும், சினேகித்த

லக்ஷ்மணர் நீர் எனனைச் சந்தேகித்தல் தகாதெனல்.

தைக் கெடுப்பவர்களுமாக இருக்கிறார்கள். வைதேகி, ஜனக மகாராஜாவின் குமாரியாகிய நீர் சொன்ன இச்சொல்லை நான் பொறுக்கமாட்டேன். அவைகள் என் காதுகளில் காய்ச்சின நாராசங்கள்போல் ஏறின. இக்காட்டில் உள்ள தெய்வங்கள் சாக்ஷி. அவர்கள் நீர் சொன்னதைக் கேட்கட்டும். நான் நியாயத்தைச் சொல்ல நீர் அநியாயமாக என்னை இக்கொடிய வார்த்தைகளைப் பேசினீர். என்னுடைய தமையன் வார்த்தையை மீறி நடவாத என்னை நீர் இப்படிச் சந்தேகித்தீர்! ஆனமையால் நீர் வருத்தத்தை அடையப்போகிறீர். இயற்கையாகவே பெண்களின் தன்மை கெட்டது. சீ! நீர் கெட்டீர். இனி நான் இராகவர் இருக்கிற இடம் போகிறேன். நீர் க்ஷேமமாக இரும். விசாலமான கண்ணையுடையாரே, உம்மை இவ்வனதேவதைகள் பாதுகாக்கட்டும். பல அபசகுனங்கள் தோன்றுகின்றன! மறுபடி நான் இராமரோடு திரும்பி வரும்பொழுது உம்மைப் பார்ப்பேனாக" என்றார். இவ்வாறு லக்ஷ்மணர் சொல்லச் சானகி அழுது கண்ணீர் விட்டு அவரைப்பார்த்து "லக்ஷ்மணரே, இராமர் இல்லையாயின் நான் கோதாவரியில் விழுவேன்; அல்லது கழுத்தில் சுருக்கிட்டுக்கொள்ளுவேன்; அல்லது மலையின் உச்சியிலேறிக் குதித்துப் பிராணனை விடுவேன்; அல்லது கொடிய விஷத்தைக் குடிப்பேன்; அல்லது தீயில் விழுவேன். இராகவரையன்றி மற்றொருபுருஷனை நான் தொடமாட்டேன்" என்றாள். இவ்வாறு லக்ஷ்மணருக்குச் சொல்லிச் சீதை துயரத்திலமிழ்ந்தி, அழுது, கைகளால் தனது வயிற்றில் அடித்துக்கொண்டாள். விசாலமான கண்களையுடைய ஜானகி இவ்வாறு துயருறுவதை லக்ஷ்மணர் கண்டு, செயலற்று, அவளை வெகுவிதமாகச் சாந்தம் பண்ணலானார். ஆனால், அவள் தனது பர்த்தாவின் தம்பியான அவரைப்பார்த்து ஒன்றும் பேசவேயில்லை.

சீதை உயிர் மாய்ப்பேன் எனல்.

பின்பு லக்ஷ்மணர் கைகூப்பிச் சீதைக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டுப் புறப்பட்டு, அவளைத் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டே தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு, இராமர் போயிருக்கும் இடத்தை நோக்கிச் சென்றார்.

நாற்பத்தாறுஞ்சருக்கம்.

இராவணன் சந்நியாசிவேஷம்பூண்டு சீதையிடம் சென்றது.

இவ்விதமாகக் கடுஞ் சொல் கூறப்பெற்ற லக்ஷ்மணர் கோபங்கொண்டு இராமரைத் தேடிப் புறப்பட்டுச் சென்றார். சமயம்பார்த்து ஒளித்திருந்த தசக்கிரீவன் உடனே சந்நியாசி வேஷங்கொண்டு சீதைமுன் வந்தான். அழகான காவித்துணி உடுத்து, தலையிலொரு சிறு குடுமி வைத்து, கையிற் குடைபிடித்து, பாதங்களில் செருப்பணிந்து, இடத்தோளில் தண்டமும் கமண்டலுவுந் தாங்கிச் சந்நியாசி உருவம் பூண்டு, சீதையிருந்த இடத்துக்கு இராவணன் வந்துசேர்ந்தான். சகோதரர்களாகிய இராமலக்ஷ்மணர்கள் இருவருமின்றித் தனியேயிருந்த சீதையை இராவணன் கிட்டினது சந்திர சூரியர்கள் இருவரும் இல்லாமலிருக்கும சந்தியாகாலத்தை நள்ளிருள் கணுகினதுபோலத் தோன்றிற்று. புகழ்பெற்றவளும் இளம்பருவ முடையவளுமாகிய சீதையை அக்கொடியவன் சந்திரனைவிட்டுப் பிரிந்த உரோகிணி நக்ஷத்திரத்தை அங்காரகன் பார்த்ததுபோலப் பார்த்தான். கொடிய செயல்களைச் செய்யும் அப்பாவியைக் கண்டு ஜனஸ்தானத்திலிருந்த மரங்கள் அசையவில்லை; காற்றும் அடிக்கவில்லை. அவன் தனது சிவந்த கண்களால் சீதையைப் பார்த்த பார்வையைக் கண்டு பயந்து வெகு வேகமாக ஓடும் கோதாவரி நதியும் தனது வேகம் அடங்கிற்று. இரா

இராவண சந்நியாசி சீதை முன் சென்றது.

மர் இல்லாத சமயம்பார்த்துத் தசக்கிரீவன் சந்நியாசி வேஷம் பூண்டு சீதைமுன் சென்றான். சித்திரா நக்ஷத்தி ரத்தைச் சனி சென்று சேர்வதுபோல் கணவனைக் காணு மல் பரிதபிக்கும் சீதைமுன் புல்லால் மூடப்பட்ட கிணறு போலக் கொடியவனுகிய இராவணன் நல்ல தவத்தினர் வடிவங்கொண்டு சென்றான். கொடிய கருத்துள்ள அவ் வரக்கன், அழகிய வெள்ளிய பற்களையும், இதழையும், பூரணசந்திரன் போன்ற முகத்தையும், தாமரை யிதழ் போன்ற கண்களையும் உடையவளாய், மஞ்சள் பட்டுடுத் துத் துக்கத்தால் கண்ணீர் பெருக்கிப் பர்ணசாலையில் உட்கார்ந்திருக்கும் அழகான சீதையை அணுகினன். அவளைக் கண்டவுடன் ராக்ஷசேந்திரன் மன்மத பாணத் தால் மொத்துண்டான். வேதமோதிக்கொண்டு அவ்வரக் கர் மன்னவன் தன்னழகினல் மூவுலகத்தையும் வென்று லக்ஷ்மிபோல விளங்கும் சீதையைப்பார்த்துப் புகழத் தொடங்கினன். "பொன்போன்ற மேனியை உடைய ராகி மஞ்சள்பட்டுடுத்து தாமரை ஓ டைபோல அழகான தாமரை மலர்மாலை யை அணிந்திருக்கும் நீங்கள் யாரம்மா? அழகான முகம் படைத்த மாதே, நீங்கள் யார்? கீர்த்தியோ? அழகோ? லக்ஷ்மியோ? அப்சரசோ? ஐசுவரியத்தின் உருவம்மா? அல்லது தனது இஷ்டப்படி சஞ்சரிக்கும் ரதிதேவியோ? உங்களுடைய பற்கள் ஒன்று போல் எல்லாம் அழகாகவும், கூரிய முனைகளையுடையன வாகவும், வெண்மையாகவும் இருக்கின்றன. உங்கள் கண் கள் விசாலமாகவும் நிஷ்களங்கமாகவும் செவ்வரிபடர்ந் தனவாகவும் கருவிழிக ளுடையனவாகவும் விளங்குகின் றன. கடிபாகம் விசாலமும் பெருமனுமா யிருக்கின்றது; துடைகள் யானைத் துதிக்கைபோலத் திரண்டு பருத் திருக்கின்றன. தனங்கள் விம்மிப் புடைத்து இறுமாந்து மணிவடங்களணிந்து பனம்பழத்துக் ஜோப்பாக விளங்கு

இராவணன் சீதையை யார் என வினவியது.

இராவணன் சீதையைப் புகழ்தல்.

கின்றன. அம்மணி, உங்கள் புன்னகையும், பற்களின் அழகும், கண்களின் ஒளியும், உங்கள் மேனியும் ஆற்று நீர் கரையைக் கரைத்துக்கொண் டோடுவதுபோல என் உள்ளத்தை முழுதும் கவர்ந்துவிட்டன. பிடிக்கடங்கின இடையையும் அழகிய கூந்தலையும் உடையவரே, உம்மைப் போல் இவ்வளவு அழகான பெண்ணைத் தேவப்பெண் களுள்ளும், கந்தர்வ யக்ஷ கின்னரப் பெண்களுள்ளும் நான் பார்த்ததில்லை. இவ்வுலகத்தில் மிக உத்தமமான உங்கள் அழகும், இளமையும், சாயலும், நீங்கள் காட்டில் வசிப்பதும எல்லாம் என் மனத்தை மயக்குகின்றன. தங் களிஷ்டப்படி உருவம் மாறும் கொடிய அரக்கர்கள் வசிக் கும் காடு இது. ஆகையால், நீங்கள் நாட்டுக்குத் திரும் பிப்போகவேண்டும். நகரத்திலும பட்டணத்திலும் அழ கான மாளிகையின்கண்ணும் நலல வாசனைகள் நிரம்பிய பூஞ்சோலைகளிலும் நீங்கள் வசிக்கவேண்டும. உயர்ந்த மாலைகள், உயர்ந்த உணவு, உயர்ந்த புடைவை, உயர்ந்த புருஷன் இவைகள் எப்பொழுதும் உங்களுக்கிருக்கவேண் டுமென்று நான் எண்ணுகிறேன். மாதே, நீர் யார்? ருத் திரர்கள், வசுக்கள், தேவர்கள் இவர்களுள் யாரைச்சேர்ந் தவர்? நீர் தேவகன்னிகை என்றே நான்

நீர் ஏன் இக்காட்டிற்கு வந்தீர் எனல.

எண்ணுகின்றேன். இக்காட்டிற்குக் கந் தர்வர்கள், தேவர்கள், கின்னரர்கள் ஒரு வரும் வரமாட்டார்கள். இது அரக்கர்கள் வாழும் இடம். நீர் எவ்வாறு இங்கு வந்தீர்? இவ்விடத் தில் சஞ்சரிக்கும் குரங்கு, சிங்கம், புலி, யானை, கரடி, செந் நாய், கழுதைப்புலி முதலிய விலங்குகளைக் கண்டு நீர் எவ்வாறு பயப்படாமலிருக்கிறீர்? இந்தக் காட்டில் தனி யே இருந்துகொண்டு இவ்விடத்தில் சஞ்சரிக்கும் வெகு பலம்பொருந்திய பயங்கரமான மதயானைக் கூட்டங்க ளைக் கண்டு எப்படி நீர் பயப்படாமலிருக்கிறீர்? நீர் யார்?

யாரைச் சேர்ந்தவர்? எங்கிருந்து வந்திருக்கிறீர்? என்னத்திற்காகக் கொடிய அரக்கர்கள் சஞ்சரிக்கும் இத்தண்டக வனத்தில் தனிமையாக வசித்துக்கொண்டிருக்கிறீர்?" என்றான். துஷ்டனாகிய இராவணனால் இவ்வாறு வினவப்பட்ட சீதை அவனுடைய அந்தண வேஷத்தைக் கண்டு அவனுக்கு அதிதிகளுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளில் ஒன்றுங் குறையாமல் செய்தாள். முதலில் ஆசனம் கொடுத்து, அதன்பின் காலலம்ப ஜலம் வார்த்து, பிறகு வெகு யோக்கியன்போலக் காணும் அவனைப் பார்த்து "அன்னம் சித்தமாகவிருக்கிறது" என்றாள். காவித் துணியுடுத்துக் கையில் கமண்டலம் தரித்துப் பிராமண வேஷம்பூண்டு வந்த இராவணனை அவன் கெட்ட எண்ணமுள்ளவனாயும் பூஜிப்பதற்கு அயோக்கியனாயுமிருந்தபோதிலும் "இந்த ஆசனத்தின்மேல் உட்காருங்கள். இதோ ஜலம் பெற்றுக்கொள்ளுங்கள். இக்காட்டில் கிடைக்கும் கிழங்குகளும் பழங்களும் தங்களுடைய புசிப்புக்கென்று இதோவைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை உங்களுக்கு வேண்டியமட்டும் புசியுங்கள்" என்றாள். இவ்வாறு மனிதர்களுக்குள் உத்தமரான இராமருடைய மனைவி இராவணனை வெகுமரியாதையாகப் போசனத்துக் கழைக்க, அவன் தனக்கு முடிவுகாலம் கிட்டிவிட்டபடியால் அவளை எப்படியாவது பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு போய்விடவேண்டுமென்று கருதினான். அப்பொழுது சீதை வேட்டைக்குப்போயிருந்த இராமர் லக்ஷ்மணருடன் திரும்பிவருவதை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துத் தனது கண்களுக்கு எட்டியமட்டும் காட்டை நான்கு பக்கங்களிலும் நோக்கினாள். எவ்வாறுகச் சுற்றிப்பார்த்தபோதிலும் அக்காடெங்கும் பசுமையாக இருக்கக் கண்டாளே யன்றி இராமலக்ஷ்மணர்களை அவள் காணவில்லை.

சீதை ராவணனுக்கு அதிதிபூசை செய்தல.

நாற்பத்தேழாஞ் சருக்கம்.

இராவணன் கெட்ட எண்ணங்கொண்டதை சீதை தெரிந்துகொண்டு நிந்தித்தல்.

சீதை தன் வரலாறு கூறல.

சீதை, தன்னைக் கவர்வதற்காகச் சந்நியாசி வேஷம் பூண்டுவந்த இராவணன் இவ்வாறு கேட்க, தனக்குள்ளே "இவரோ நமது அதிதி. மேலும் பிராமணர். கேட்டதைச் சொல்லாவிடில் இவர் நம்மைச் சபிப்பார்" என்று கொஞ்சநேரம் யோசித்து அவனைப் பார்த்துச் சொல்லலுற்றாள் :— "உங்களுக்கு நன்மையுண்டாகுக. நான் மிதிலைக் கரசனான மகாத்துமாவாகிய ஜனகமகாராஜாவின் குமாரி; இராமருடைய அன்பான மனைவி. என்பெயர் சீதை. இக்ஷ்வாகு வம்சத்தரசர்கள்மாளிகையில் பன்னிரண்டு வருஷகாலம் வசித்துப் பலவிதபோகங்களையும் அனுபவித்து என்னுடைய இச்சைகள் எல்லாம் நிறைவேறப் பெற்றேன். பதின்மூன்றாம் வருஷத்தில் தசரதமன்னர் தமது மந்திரிமார்களுடன் யோசித்து இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்கத் தீர்மானித்தார். அவ்வாறு பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் வந்து சித்தமாயிருக்கும்பொழுது எனது மாமிமார்களுள் ஒருத்தியாகிய கைகேயி தனது கணவனிடம் ஒரு வரம் கேட்டாள். அவள், சத்தியவந்தராகிய ராஜோத்தமருக்குத் தான்செய்த உபசாரத்தை நினைப்பூட்டி அவரைத் தன் வசப்படுத்திக்கொண்டு என்கணவனைக் காட்டுக்கு அனுப்பவேண்டும் என்றும், பரதனுக்குப் பட்டங்கட்ட வேண்டுமென்றும் இரண்டு வரங்களைக்கேட்டு "இராமன் பட்டத்துக்கு வருவதாக இருந்தால் நான் புசிக்கவும் மாட்-

டேன், தீர்த்தபானம் செய்யவும் மாட்டேன், தூங்கவும் மாட்டேன், என்னுயிரைமாய்த்துக்கொள்வேன்" என்று சொன்னாள். இவ்வாறு கைகேயி சொல்ல மகிபதியாகிய என்மாமனார் அவளைப் பலவித செல்வங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். அவள் அதற்கு உடன்பட வில்லை. அப்போது என் கணவனுக்கு வயது இருபத்தைந்து; எனக்கு வயது பதினெட்டு. என்கணவர் இராமர் என்னும் பெயரால் உலக மெங்கும் புகழ் பெற்றவர். அவர் சத்தியமும், நற்குணமும், நல்லொழுக்கமும் பரந்த விழியும் நீண்டகைகளும் உடையவர்; பிராணிகளுக்கெல்லாம் எப்பொழுதும் நன்மையேசெய்பவர். அப்படியிருந்தும் வெகு பராக்கிரமம் பொருந்திய என் மாமனாராகிய தசரதர் கைகேயியின் மனம் கோணாமலிருக்கவேண்டி, இராமருக்குப் பட்டாபிஷேகம்பண்ணவில்லை. பட்டாபிஷேக நிமித்தமாகத் தந்தையிடம் சென்ற என் பர்த்தாவாகிய இராமரைப் பார்த்துக் கைகேயி "இராகவா, உனதுதந்தை என்னிடம் செய்திருக்கும் கட்டளையைக் கேள். ஒருவித இடைஞ்சலின்றி இந்த இராச்சியம் பரதனுக்காகவும் நீ ஏழிரண்டாண்டு காட்டிலுறையவும் வேண்டுமாம். ஆகையால் நீ அவ்வாறுசென்று உனது தந்தையினுடைய வார்த்தையைக் காப்பாற்றிவைப்பாயாக" என்று இக்கொடுஞ் சொற்களைச் சொன்னாள். என்கணவராகிய இராமர் அவ்வாறே ஆகுகவென்று அவளுடைய வார்த்தையை அங்கீகரித்து விரதம் பூண்டு இவ்விடம் வந்தார். அவர் எப்பொழுதும் வேண்டுபவர்களுக்கு அவர்கள வேண்டும் பொருளைக் கொடுப்பவரேயன்றி ஒருவரிடமிருந்து தாம் ஒன்று வேண்டுபவரல்லர். அவர் எப்போதும் உண்மையையே பேசுபவர்; பொய்யுரைப்பவரல்லர். ஐயா அந்தணரே, இவைகளே இராமருடைய சிறந்த விரதங்கள். இராமருடைய இளைய

இராமருடைய குணச்சிறப்பு.

தாயார் வயிற்றிற்பிறந்த தம்பி லக்ஷ்மணர். அவர் இராம ருக்கு உதவியாயுள்ளவர்; சத்துருக்களை வதைக்கும் வல்லமைபெற்றவர்; வெகு பராக்கிரமசாலி. அவ்வுத்தமர் மிக்க உறு தியும் சீலமும் உடையவர். அவர் கையில் வில்லேந்தி, என்னுடன் காட்டுக்குப் புறப்பட்ட தமது தமையனாரைத் தொடர்ந்துவந்தார். இவ்வாறு ஐம்புலன் களையும் அடக்கித் தருமத்தை இடைவிடாது நடத்தும் இராமர் சடைபுனைந்து தவவேடம் பூண்டு தமது தம்பி யோடும் என்னோடும் இந்தத் தண்டகாரணியத்துக்கு வந்து சேர்ந்தார். ஐயா பிராமணோத்தமரே, இவ்வாறு நாங்கள் மூன்றுபேரும் கைகேயியினால் இராச்சியம் அப கரிக்கப்பட்டவர்களாகி எங்கள் பலத்தின் மகிமையால் இப்பயங்கரமான தண்டகாரணியத்தில் வாழ்ந்துகொண் டிருக்கிறோம். தாங்கள் இங்கே சற்றுத்தங்கி இளைப்பா றுங்கள். எனது கணவர் காட்டில் உள்ள கந்தமூல பலங்களையும் மான் பன்றிமுதலானவைகளைக்கொன்று போதுமான இறைச்சியையும் எடுத்துக்கொண்டு இதோ திரும்பிவந்துவிடுவார். தாங்கள் தங்கள் பெயர், கோத் திரம், குலம் முதலியவைகளைத் தயவுசெய்து எனக்குத் தெரிவிக்கவேண்டும். ஓ அந்தணரே, யாது காரணத்துக் காக நீர் இந்தத் தண்டகாரணியத்தில் தனிமையாகத் திரி கின்றீர்?" இவ்வாறு இராமருடைய மனைவியாகிய சீதை சொல்ல வெகுபலசாலியாகிய அரக்கர்வேந்தன் விரைந்து கூறலுற்றான்:—"சீதாய், நான் இராவணன்; அரக் கர் மன்னவன். தேவர்கள், அசுரர்கள், மானுடர்கள்யாவரும் அஞ்சுபவன். பொன் போலும் மேனியுடையவளும் பட்டுடுத் துள்ளவளுமாகிய உன்னைக் கண்டது முதல் நான் எனது மனைவிமார்கள்மேல் ஆசையை முழுதும் ஒழித் துவிட்டேன். நான் பல இடங்களிலிருந்து அநேக அழ

லக்ஷ்மணருடைய குணச் சிறப்பு.

இராவணன் தன் வரலாறு கூறல்.

கான பெண்களைக் கொண்டுவந்து வைத்திருக்கிறேன். அவர்களெல்லாருக்கும் நீ தலைவி ஆகுவாயாக. சமுத்திரத்தின் நடுவில் நாலு புறமும் கடலால் சூழப்பட்டு மலையின் சிகரத்தில் அமைக்கப்பட்ட இலங்கை எனது ராஜதானி. சீதே, அவ்விடத்தில் நீ என்னுடன் சிங்காரவனத்தில் சந்தோஷமாக உலாவலாம். அப்பொழுது நீ இந்தக்காட்டில் வாழ எண்ணமாட்டாய்; சீதே, நீ என்னுடைய மனைவி ஆய்விட்டால் நல்ல ஆடையாபரணங்கள் அணிந்த ஐயாயிரம் பணிப்பெண்கள் உனக்குப் பணிவிடைசெய்வார்கள்." இவ்வாறு இராவணன்சொல்ல, உத்தமியான ஜானகி கோபமடைந்து அவ்வரக்கனை அகன்று நின்று சொலலலுற்றாள்: "பெரிய மலைபோல அசைக்க முடியாதவரும், மஹேந்திரனுக் கொப்பானவரும், பெருங் கடல்போலக் கலக்க முடியாதவருமான இராமருடைய மனைவி நான். சகல லக்ஷணங்களும் பொருந்தினவரும், ஆலவிருக்ஷம் போல்வரும், சத்தியவந்தரும், மகாத்துமாவுவாகிய இராமருடைய மனைவி நான். நீண்ட கரங்களும், அகன்ற மார்பும், மதத்த சிங்கத்தின் நடையுமுடைய புருஷ சிங்கமாகிய இராமருடைய மனைவி நான். பூரண சந்திரனுக் கொப்பான முகமுடையவரும், ராஜகுமாரரும், ஐம்புலன்களை அடக்கினவரும, பெரும் புகழ்பெற்றவருமாகிய இராமருடைய மனைவி நான். நீ என்னை இச்சிப்பது ஒரு பெண்சிங்கத்தை நரி இச்சிப்பதுபோலும். சூரியனுடைய கிரணம்போல என்னை நீ தொட முடியாது. ஓ ராக்ஷசா, இராகவருடைய காதலியாகிய என்னை நீ கவரக்கருதினமையால் இந்த மரங்களெல்லாம் உன் கண்களுக்குப் பொன்னுலானவைகளாகப்புலப்படும். மிருகாரியாகிய சிங்கத்தின்வாயிலும் சர்ப்பத்தின் வாயிலுமுள்ள பல்லைப்பிடுங்க நீ நினைக்கின்றாய்! மந்தா

சீதை இராவணனை நிந்தித்தல்.

மலையை நின்கையால்தழுவவும் விஷத்தை உண்டுவிட்டு உயிருடனிருக்கவும் நீ நினைக்கின்றாய்! கூரிய ஊசியால் கண்களைத் துடைக்கவும் கத்தியின் கூரை நாவால் பரிசிக்கவும் நீ நினைக்கின்றாய்! கழுத்தில் ஒரு பெருங்கல்லைக் கட்டிக்கொண்டு சமுத்திரத்தைக் கடக்க நீ விரும்புகிறாய்! இராமருடைய உத்தமமான பத்தினியை விரும்பும் நீ சூரியசந்திரர்களைக் கையால் பற்றவும், கொழுந்துவிட்டெரியும் தீயை துணியில் முடிந்துகொள்ளவும், கூரிய இருப்புச் சூலங்களின்மேல் நடக்கவும் கருதுகிறாய்! சிங்கத்துக்கும் நரிக்கும் போலவும், கால்வாய்க்கும் சமுத்திரத்துக்கும் போலவும், அமுதத்துக்கும் கஞ்சிக்கும் போலவும், தங்கத்துக்கும் இரும்புக்கும் போலவும், சந்தனத்துக்கும் சேற்றுக்கும் போலவும், யானைக்கும் பூனைக்கும்போலவும், காக்கைக்கும் கருடனுக்கும்போலவும், மயிலுக்கும் நீர்க்கோழிக்கும் போலவும், சாரசப்பக்ஷிக்கும் கழுகுக்கும்போலவும், இராமருக்கும் உனக்கும் உள்ள வேற்றுமை பெரிது. இந்திரனுக்கொப்பான பராக்கிரமத்தையுடைய அப்பெரிய வில்லாளியாகிய இராமர் உயிருடன் இருக்கும்வரையில் நீ என்னை அபகரித்தபோதிலும் நெய்யைக்குடித்த கொதுகுபோல நீ மாண்டுபோவது நிச்சயம்.” கொடிய ராவணனைப்பார்த்து இந்தச் சொற்களைச் சொல்லி உத்தமியான சீதை பெருங்காற்றால் அசைக்கப்படும் வாழைபோல நடுங்கி நின்றாள். அப்போது யமன்போன்ற பேராற்றலையுடைய இராவணன் அவள்மனத்தில் இன்னும் அதிக பயத்தை உண்டுபண்ணும்பொருட்டுத் தனது குலம், பலம், பெயர், தான் செய்த கொடிய செயல்கள் முதலியவைகளை எடுத்துச் சொல்லத்தொடங்கினான்.

நாற்பத்தெட்டாஞ் சருக்கம்.

சீதையிடம் இராவணன் தனது மகிமையை உரைத்தல்.

சீதை இவ்வாறு சொல்ல இராவணன் அதிககோபங் கொண்டு, தனது புருவங்களை நெரித்துக் கூறலுற்றான்:— "ஓ சுந்தரி, நான் குபேரனுடைய தம்பி. என்பெயர்பத்துத் தலைகளைப் படைத்த இராவணன். நீ வாழ்வாயாக. நான் வெகு பிரதாபமுள்ளவன். யமனைக்கண்டு மனிதர் நடுங்கி ஓடுவதுபோல், என்னைக் கண்டால் தேவர்கள், கந்தர்வர்கள், பிசாசர்கள், உரகர்கள், பதகர்கள் முதலியவர்களெல்லாரும் பயந்து ஓடிவிடுவார்கள். நான் என் அண்ணனாகிய குபேரனை ஒருகாரணநிமித்தம் கோபங்கொண்டு சண்டையிட்டு வெற்றிகொண்டேன். அதனால் அவன் எனக்கு அஞ்சித் தனது செல்வநகரமாகிய இலங்கையை விட்டுக் கைலைமலைக்கோடி அங்கே குடியிருக்கிறான். வேண்டுமிடத்துக்குப் போகும் புஷ்பகம் என்னும் அவனுடைய விமானத்தை நான் எனது பராக்கிரமத்தால பறித்துக்கொண்டேன். அதன்மீதேறி நான் இப்பொழுது வேண்டுமிடங்களுக்கு ஆகாசமார்க்கமாகச் செல்வேன். நான் கோபங்கொள்ளும்போது எனது முகத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே இந்திரன் முதலிய தேவர்கள் எல்லாரும் ஓடிவிடுவார்கள். நான் இருக்கும் இடத்தில் காற்றும் பயத்துடன் வீசும். கொடுமையான கிரணங்களை உடைய சூரியனும் எனக்குப் பயந்து குளிர்ந்த சந்திரன்போலப் பிரகாசிப்பான். வேறென்ன சொல்லவேண்டும்? நான் வசிக்குமிடத்தில் மரங்களும் இலைகள் அசையா ; ஆறுகளும் விரைந்து

இராவணன் தன பிரதாபத்தை எடுத்துச் சொல்லல்.

ஓடா. சமுத்திரத்துக்கு அக்கரையில் எனது அழகிய பட்டணமாகிய இலங்கை உளது; அது இந்திரனுடைய அமராவதிபோல நான்கு புறத்திலும் கொடிய ராக்ஷசர்களால் காக்கப்பட்டுப் பொன்மயமான மதில்களால் சூழப்பட்டிருக்கிறது. அது தங்கத்தால் கட்டப்பட்ட மாளிகைகளும், இரத்தினமிழைத்த கோபுரவாயில்களுமுடையது. அது ஆனைகள், குதிரைகள், தேர்கள் நிறைந்தது; எப்பொழுதும் மங்களவாத்தியங்கள் ஒலிப்பது; விரும்பிய பழங்களைக் கொடுக்கும் பல்வகை மரங்கள் நிறைந்து சிங்கார வனங்கள் செறிந்தது. ஜனகராஜபுத்திரி, சீதே, நீ அவ்விடத்தில் என்னுடன் வாழவேண்டும். மாதே, அங்கே நீ ஒருபொழுதும் மானிடப் பெண்களைப்பற்றி நினைக்கமாட்டாய். தையால், அவ்விடத்தில் நீ மானுடர்களுக் கெட்டாத போகங்களை அனுபவித்துக்கொண்டு சுகமாயிருக்கும்போது அறப ஆயுளுடைய மானிடனாகிய இராமனை நினைக்கவேமாட்டாய். தசரதராஜன் தனக்கு வேண்டிய குமாரனுக்குப பட்டங்கட்டி வைத்துவிட்டு வீரமில்லாத தனது மூத்தகுமாரனைக் காட்டுக் கோட்டிவிட்டான். தடங்கண்ணாய், தனது இராச்சியத்தை இழந்து துன்புறும் விரதியாகிய இராமனோடு இனி உனக்கு உறவு என்ன? அரக்கர்களெல்லாருக்கும் மன்னவன் நான். காமபாணத்தால் துளைபட்டு உன்னைத் தேடிவந்தேன். ஆதலால் என்னை அலக்ஷ்யம் செய்வது உனக்குத் தகாது. நீ அலக்ஷ்யம் செய்வாயேயானால் முன்னர்ப் புரூரவனைக் காலால் உதைத்துத்தள்ளிய ஊர்வசிபோலப் பின் பரிதாபப் படுவாய். இராமன் மானிடன்; போரில் என் கைவிரலொன்றிற் கிணையாகான். மாதே, உனது அதிர்ஷ்டத்தால் நானுன்னைத் தேடிவந்திருக்கிறேன். ஆகையால், நீ என்னிடம் வந்துவிடு" இராவணன்

இலங்கையைப் புகழல்.

இராமனை விட்டு விட்டு என்னுடன் வாவெனல்.

இவ்வண்ணம் சொன்னதைச் சீதைகேட்டு வெகுகோப மடைந்து கண்கள் சிவந்து அவ்வரக்கர் மன்னவனை நோக்கி இவ்வித கடினமான சொற்களைச் சொல்வாளாயினாள் :—

“எல்லாராலும் வணங்கப்படும் குபேரனை உன் சகோதர னென்று சொல்லிக்கொண்டு நீ எவ்விதமாக இந்தப் பாப மான காரியத்தைச் செய்யத் துணிகிறாய்? அடா இராவணா, புலன்களை அடக்காத புத்தியற்ற கொடியவனாகிய உன்னை அரசனாக அடைந்ததால் அரக்கர்கள் எல்லாரும் மாண்டு போகப்போகிறார்கள். இந்திரன் மனைவியாகிய சசிதேவி யைக் கவர்ந்து சென்றவன் ஒருகால் பிழைத்தாலும் பிழைக்கலாம்; இராமருடைய மனைவியாகிய என்னைக் கவர்ந்தவன் ஒருநாளும் உயிருடன் இருக்கமாட்டான். வச்சிராயுதத்தைத் தரித்த இந்திரன் மனைவியாகிய சசி தேவியை அவமதிசெய்தவன் பிழைப்பதுகூடும்; என்னை அவமதி செய்பவன் அமிர்தபானம் பண்ணினவனாயினும் கூற்றுக்குத் தப்புவதில்லை.”

நாற்பத்தொன்பதாஞ்சருக்கம்.

இராவணன் சீதையை எடுத்துச்செல்லல்.

சீதை சொன்னதைக்கேட்டு வெகு பிரதாபவானாகிய தசக்கிரீவன் கையொடுகையைத்தட்டி ஒரு பேருருவுகொ ண்டு மறுபடியும் சீதையைப் பார்த்து “நீ பித்தம்பிடித் தனைபோலும். நீ எனது வீரியத்தையும் பராக்கிரமத் தையும் கேட்டதில்லையா? நான் ஆகாசத்தில் நின்று கொண்டு எனது கைகளால் இந்தப் பூமியை மேலே எடுப்பேன்; சமுத்திரத்தை முழுதும் குடிப்பேன்; யமனையும் போரில் வதைப் பேன்; எனது கூரிய பாணங்களால் சூரி யனைத் துளைப்பேன்; பூமியையும் பிளப்பேன். நான் விரும்

இராவணன் தன் பிரதாபத் தைக் கூறல்.

பிய உருவெடுக்கவல்லேன். ஆகையால், நீ என்னைக் கண்ணெடுத்துப்பார்" என்றான். இவ்வண்ணம் அவன் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே அவனுடைய பிங்களவர்ணமான கண்கள் கோபத்தால் சிவந்து எரிகின்ற அக்கினிக்கொப்பாயின. உடனே இராவணன் தான் கொண்ட சாதுவான சந்நியாசி வேஷத்தை நீக்கிவிட்டு யமனுக்கொப்பான தனது நிஜ உருவங்கொண்டு மிகச்சிவந்த கண்களும், பொற்குண்டலங்களும், பத்துந்தலைகளும், பாணங்களும், வில்லுகளும் உடையவனாய் வெகு கோபங்கொண்டு கார்மேகம் போல நின்றான். அவ்வாறு சந்நியாசிவேஷத்தையொழித்துப் பெரிய வடிவமடைந்த அரக்கர் மன்னவனாகிய இராவணன் இரத்தவர்ணமான ஆடைபுனைந்த தனது நிஜ உருவங்கொண்டு ஸ்திரீரத்தினமாகிய மைதிலியை உற்றுப் பார்த்தான். கருங்குழலுடையவளாய் ஆடையாபரணமணிந்து சூரிய ரஸ்மிபோல விளங்கும் சீதையை அவன் பார்த்து "சுந்தரீ, மூவுலகங்களிலும் கீர்த்திபெற்ற புருஷனை அடையக்கருதினால், நீ இப்பொழுதே என்னுடன் வந்துவிடு. நான் உனக்குத் தகுதியான கணவன். நீ என்னை ஏற்றுக்கொள். நான் உத்தமன். உன்னிடம் காதல் கொண்டவன். நான் ஒருபொழுதும் உனக்கிஷ்டமில்லாத காரியத்தைச்செய்யேன். ஆகையால், நீ மானிடனிடம் வைத்திருக்கும் அன்பை விட்டுவிடு. என்னிடம் உனது அன்பை வை. நீ ஒன்றும் தெரியாதவள்; தெரிந்தவளைப்போல் நடிக்கிறாய். தனது இராச்சியத்தை இழந்து, எண்ணங்கள் கைகூடாது, ஆயுளும் குறுகிய இராமனை நீ என்ன குணங்களைக் கண்டு காதலிக்கிறாய்? அவன் ஒரு பெண்ணின் கட்டளைப்படி தனது நாட்டைத்துறந்து, அன்பர்களையும் பந்துக்களையும் விட்டுப் பிரிந்து, கொடிய விலங்குகள் சஞ்சரிக்கும் இக்காட்டில் வந்து புத்தியீனத்தால் வசித்துக்கொண்டிருக்கிறான்"

இராவணன் சீதையைத் தன்னை நாயகனாக ஏற்றுக்கொள்ள வேண்டல்.

இராவணன் சீதையைக் கைப் பற்றல்.

என்றான். அக்கொடிய பாவியாகிய அரக்கன் அன்பாகப் பேசவேண்டிய சீதையைப்பார்த்து வன்சொற் சொல்லிக் காமத்தால் கண்மூடப் பட்டவனாய் அவளை நெருங்கி, உரோகிணியைப் புதன் ஆகாசத்தில் பற்றுவதுபோல் பற்றினான். அவன் சீதையை அவளுடைய *கூந்தலை இடக் கையாலும்‡துடைகளை வலக்கையாலும் பிடித்துத் தூக்கினான். யமனுக்கொப்பான மலைபோன்ற பெரிய தோள்களையும் கூரிய பற்களையுமுடைய இராவணனைக் கண்டு பயந்து நடுங்கி அங்கிருந்த வனதேவதைகளெல்லாம் ஓடின. பெரிய ஓசையுடையதும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டதும் கழுதைகள் பூட்டப்பட்டதுமான இராவணனுடைய ரதம் அங்கே வந்து தோன்றிற்று. அப்போது இராவணன் பெருங்குரலோடு கொடியவார்த்தையால்† சீதையைப் பயமுறுத்தித் தூக்கித் தன் மடியில் வைத்துக்கொண்டு இரதத்திலேறினான். புகழ்பெற்ற சீதை அவ்வாறு இராவணனால் பிடிக்கப்பட்டுத் துக்கத்தில் மூழ்கித் தூரத்திலுள்ள காட்டிற்குச்சென்ற இராமரைக்குறித்து "ஓ இராமா, இராமா" என்று கதறினாள். பன்னகேந்திரன் மனைவிபோலத்

இராவணன் சீதையைக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் செல்லல்.

துவளும் சீதையை இராவணன் மோகத்தால் மயங்கித் தூக்கிக்கொண்டு உயரக் கிளம்பினான். அவள் அவன்மேல் சிறிதும் அன்பில்லாதவளாதலால் தன்னை அவன் கையில்நின்று விடுவிக்கப் பெரிதும் முயன்றாள். அரக்கர் மன்னவனால் ஆகாசமார்க்கமாகக் கொண்டு

* இந்த இடத்தில் ஸ்காந்தபுராணத்தில கூந்தலின் கிழியையும், துடைகளின் கிழியையும் பிடித்ததாய்ச் சொல்லபபட்டிருக்கிறது.

† இவ்விடத்திலும் மடியில் வைத்துக்கொண்டது சீதையின் சாயையை என்பது ஸ்காந்தபுராணத்தின் கூற்று.

‡ சீதையைப் பற்றிச் சொல்வ தெல்லாம் சாயையைப் பற்றியே என்று நினைத்துக்கொள்ளவேண்டியதென்பது திலக வியாக்கியானத்தின் கொள்கை.

சீதை பிரலாபித்தல்.

போகப்படாநிற்கையில் அவள் பைத்தியம்பிடித்தவள் போலவும், பிராந்தி கொண்டவள்போலவும், பிணி கொண்டவள்போலவும் அதிகமாகக் கதறத் தலைப்பட்டாள் : " ஆ! லக்ஷ்மணரே, பெரும் பராக்கிரமம் பொருந்தியவரே, பெரியவர்கள் சொற்படி நடப்பவரே, நம்மிடம் அசூயைகொண்ட அரக்கன் என்னைத் தூக்கிப்போவதை நீர் அறியீரோ? தருமத்தின்பொருட்டு வாழ்வையும் சுகத்தையும் பொருளையும் துறந்து காட்டுக்குவந்த இராகவரே, வெகு பாவியாகிய இராவணன் என்னை எடுத்துப்போவதை நீர் காணிலீரோ? ஐயா, சத்துருக்களைச் சங்காரம் செய்பவரே, நீர் எப்பொழுதும் கொடியவர்களைத் தண்டிக்கிறவராயிற்றே! இந்தப் பெரும் பாவியாகிய இராவணனை ஏன் நீர் தண்டிக்கவில்லை? தானியங்கள் முற்றக் காலம் வரவேண்டுமென்பதுபோல் இக்கொடிய பாவியைத் தண்டிப்பதற்குத் தகுந்தகாலமும் வரவேண்டுமோ? இராவணா, கெட்ட காலத்தால் உயிருக்கு முடிவைத் தருகின்ற இப்பயங்கரமான தொழிலைச் செய்த உனக்கு இராமரிடமிருந்து தக்க தண்டனை கிடைக்கும். இப்பொழுதுதான் கைகேயியின் எண்ணமும், அவள் பந்துக்கள் எண்ணமும் நிறைவேறின. ஆ! மஹா பெருமைபொருந்திய தர்மசாலியாகிய இராமருடைய தருமபத்தினியாகிய நான் இவ்வாறு தூக்கிக்கொண்டு போகப்படுகிறேனே! இந்தத் தண்டகாரணியத்தில் நன்றாகப் புஷ்பித்திருக்கும் கர்ணிகார விருக்ஷங்களே, இராமரிடம் இராவணன் சீதையைத் தூக்கிப்போகிறான் என்று சொல்லுங்கள். நன்றாகப் புஷ்பித்த பல சிகரங்களையுடைய பிரசரவணபருவதமே, உனக்கு நமஸ்காரம்; நீ இராமரிடம் இராவணன் சீதையைத் தூக்கிப்போகிறான் என்று விரைவில் கூறு. அன்னம் காரண்டவம் முதலிய பறவைகள்நிரம்பிய கோதாவரிநதியே, உனக்கு நமஸ்காரம்.

செய்கிறேன்; அம்மா நீயும் இராமரிடம் இராவணன் சீதையைத் தூக்கிப்போகிறான் என்றுசொல்லு. விருக்ஷங்கள் அடர்ந்த இக்காட்டிலுள்ள தெய்வங்களே, உங்களுக்கெல்லாம் நமஸ்காரம்; நீங்கள் எல்லாரும் என் கணவரிடம் இராவணன் என்னைத்தூக்கிப்போனான் என்று தெரிவியுங்கள். இன்னும் இக்காட்டில் வசிக்கும் மிருகங்காள், பக்ஷிகாள், உங்கள் எல்லாருக்கும் நமஸ்காரம், எனது கணவரிடம் உம்முடைய உயிருக்குமேலான மனைவியை, அநாதையாய் இருக்கும்பொழுது, பலாத்காரமாக இராவணன் தூக்கிக்கொண்டு போனான் என்று சொல்லுங்கள். யமன் தான் என்னைத் தூக்கிக்கொண்டு போனபோதிலும் என் கணவர் அறிவாராயின் தமது பேராற்றலால் ஒருகொடியில் என்னை மீட்டுக்கொண்டு திரும்புவார்". இவ்வாறு வெகு பரிதாபமாகப் பிரலாபித்துக்கொண்டு செல்லுகின்ற விசாலமான கண்களையுடைய சீதை கழுகரசனாகிய ஜடாயு ஒரு விருக்ஷத்தின்மேல் உட்கார்ந்திருப்பதைத் தன் கண்களால் கண்டாள். இராவணன் வசத்தில் சிக்கிக்கொண்ட

சீதை ஜடாயுவைக் கண்டு பிரலாபித்தல்.

சீதை உடனே வெகு பயத்தோடும் துக்கத்தோடும் அலறிக்கொண்டு "ஐயா ஜடாயுவே, ஓ பெரியவரே, என்னைப்பாருங்கள்! என்னை அநாதைபோலக் கொடிய அரக்கன் இரக்கமின்றித் தூக்கிக்கொண்டு போகிறானே! வெகு பலமுடையவனும் ஆயுதந்தரித்தவனுமாகிய இக்கொடிய அரக்கனைத் தடுக்கத் தங்களால் முடியாது. என்னை இவன் தூக்கிக்கொண்டுபோகும் சமாசாரத்தை ஒன்றும் விடாமல் தாங்கள் கண்டதைக் கண்டபடி இராமரிடத்திலும் லக்ஷ்மணரிடத்திலும் சொல்லவேண்டும்" என்று வேண்டினாள்.

ஐம்பதாஞ் சருக்கம்.

ஜடாயு இராவணனைத் தடுத்தல்.

அந்தச் சத்தத்தைச் சிறிது தூங்கிக்கொண்டிருந்த ஜடாயு கேட்டு எழுந்து இராவணனையும் சீதையையும் கண்டார். அதன்பிறகு மலையின் சிகரம்போன்ற கூரிய மூக்குடைய அப்புள்ளரசர் மரத்தில் இருந்தபடியே இராவணனைப்பார்த்து "தம்பி தசக்கிரீவ, நான் பழமையான தருமங்களை அநுஷ்டித்து உண்மையைக் கைப்பற்றினவன். என் பெயர் ஜடாயு; பலம்பொருந்திய கழுகுகளுக் கரசன். தசரத குமாரராகிய இராமர் உலகத்துக்கெல்லாம் இறைவர்; இந்திரனுக்கும் வருணனுக்கும் ஒப்பானவர்; எல்லாப் பிராணிகளுக்கும் எப்பொழுதும் நன்மையே செய்பவர். நீ இப்பொழுது தூக்கிக்கொண்டு போகும் இந்த மிக அழகிய பெரும் புகழ்பெற்ற சீதை அவ்வுலோக நாதருடைய தரும பத்தினி. குடிகளைப் பாதுகாக்கும் அரசனாகிய உனக்குப் பிறன்மனைவியைக் கைப்பற்றுவது தருமமா? மஹாபலம் பொருந்தியவனே, அரசர் மனைவியர்களை நீ முக்கியமாக ஆதரவுடன் பாதுகாக்கவேண்டுமே? ஆகையால், பிறர் மனைவியர்களைத் துன்பப்படுத்த நீ கொண்ட இந்த இழிவான கருத்தை விட்டுவிடு. தீரனாயுள்ளவன் நிந்தைக்கிடனாகிய தொழிலை ஒருபொழுதும் செய்யமாட்டான். அவன் பிறர் மனைவியர்களையும் தன் மனைவியைப்போல வேறொருவர் தீண்டாதபடி பாதுகாப்பான். நல்லமன்னவர்கள் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட தருமார்த்த காமங்கள் அல்லாதவைகளைச் செய்யமாட்டார்கள். அரசனே தருமார்த்த காமங்களுக்கெல்லாம் இருப்பிடம். தருமம், புண்ணியம், பாவம் எல்லாம் அரசனையே மூலகாரணமாக உடையன. ராகூ-

ஜடாயு இராவணனைச் சீதையை விட்டுப்போம்படி சொல்லல்.

சோத்தமா, நீ பாவியும் கொடிய காமியுமாய் உள்ளாய். பாவி சுவர்க்கலோகத்தை அடைந்தாற்போல நீ எவ்வாறு சம்பத்தை அடைந்தாய்? எவனுக்கு எது இயற்கையோ அதைச் சீர்திருத்த ஒருவராலும் முடியாது. கொடியவர்களிடத்தில் நல்ல உபதேசம் கொஞ்சமேனும் தங்காது. மகா பலம்பொருந்திய தருமாத்துமாவாகிய இராமர் உனது தேசத்திலாவது உனது நகரத்திலாவது ஒருவனைத் தீங்கும் பண்ணவில்லை. அப்படியிருக்க அவருக்கு நீ ஏன் தீங்கு பண்ணுகிறாய்? சூர்ப்பணகையின்பொருட்டு ஜனஸ்தானத்திலிருந்த கொடிய கரன் தனக்கொரு தீங்கும் செய்யாத இராமரை எதிர்த்து அவரால் வதைக்கப்பட்டான். அதில் இராமர் செய்தகுற்றம் என்ன? பின்னர் உலகத்துக்கெல்லாம் அரசராகிய அவர் மனைவியை நீ ஏன் தூக்கிக்கொண்டு போகின்றனை? நீ சீதையை உடனே விட்டுவிடு; இல்லாவிடில், இந்திரனுடைய வச்சிராயுதம் விருத்திராசுரனை எரித்ததுபோல, அக்கினிக்கொப்பான இராமருடைய கண்கள் உன்னை எரித்துவிடும். உன் துணியில் கொடியவிஷப் பாம்பை நீ முடிந்துகொண்டாயென்பதை நீ அறியவில்லையா? உன் கழுத்தில் யமனுடைய பாசத்தை நீ மாட்டிக்கொண்டாயென்பதை நீ அறியவில்லையா? சுமக்கக்கூடிய பாரத்தையன்றோ ஒருவன் எடுக்கவேண்டும்? புசித்தால் சுகமாகச்செரிக்கும் உணவையன்றோ ஒருவன் புசிக்கவேண்டும்? தருமம், கீர்த்தி, புகழ், பெருமை முதலியவைகளைத் தராததும் தேகத்துக்குச் சிரமந்தருவதுமாகிய காரியத்தை யார்செய்வான்? ஓ இராவணா, எனக்கு வயது அறுபதினாயிரமாகின்றது. நான் இதுவரையில் எனது மூதாதைகளிடமிருந்து எனக்குக்கிடைத்த இராச்சியத்தை நன்றாகப் பாதுகாத்து வருகிறேன். நான் வயதுசென்றவனாயினும் என்முன் சிறுவயதுள்ளவனும் கையில் விற்பிடித்துத் தேகத்தில் கவசமணிந்து இரதத்திலேறிச் செல்பவனுமாகிய நீ சீதையை எளிதில் தூக்கிக்கொண்டு போகமாட்டாய்.

என்றுமுள்ளதும் மாற்றமுடியாததுமான உண்மையை உணர்த்தும் வேதங்களையும் சுருதிகளையும் தர்க்கசாஸ்திர யுக்திகளைக்கொண்டு அழிக்க எவ்வாறு முடியாதோ அது போல் என் கண்முன்பாக நீ சீதையைப் பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டுபோக முடியாது. நீ சூரனானால் கொஞ்ச நேரம் காத்திருந்து இராமர்முன் நின்று போர்புரி. அப்போது கரனைப்போல் நீயும் மாண்டுவிழுந்து பூமியைத் தழுவுவாய். அடிக்கடி தைத்தியர்களையும் தானவர்களையும் பலதரம் யுத்தத்தில் கொன்ற இராமர் மரவுரிஉடுத்து உன்னையும் ஒரு நொடியில் வதைப்பார். அவ்விரு ராசகுமாரர்களும் நெடுந்தூரம் போயிருக்கிறார்கள்; நான் இப்போது என்ன செய்வேன்? கீழ்மகனே, அவர்களை நீகண்டமாத்திரத்தில் பயத்தால் நடுங்கி நாசமடைவாய். நானுயிருடன் இருக்கும் வரையில் ராமருடைய காதலியாகிய தாமரை மலருக்கொப்பான கண்களையுடைய நற்குணமுள்ள சீதையை நீ எடுத்துப்போக முடியாது. நான் என் உயிரைக் கொடுத்தாவது மகாத்துமாக்களாகிய இராமருக்கும் தசரதருக்கும் உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். நில்லடா தசக்கிரீவா, கணப்பொழுது நின்று பார். ஓ நிசிசர, என்னால் கூடியவரையில் நான் உனக்குப் போர் விருந்தளிக்கின்றேன். காம்பினின்று பழத்தைப் பறித்தெறிவதுபோல இவ்விரதத்திலிருந்து உன்னைக் கீழே தள்ளுகிறேன்" என்று சொன்னார்.

ஐம்பத்தொன்றாஞ்சருக்கம்.

ஜடாயுவுக்கும் இராவணனுக்கும் நடந்த யுத்தம்.

கழுகரசனாகிய ஜடாயு இவ்வாறு நீதியை எடுத்துரைக்க இராவணன்கேட்டுக் கோபமடைந்து, அக்கினிபோ

இராவணன் ஜடாயுவை எதிர்த்து யுத்தம் செய்தல்;

லக் கண்கள் சிவந்து, தானணிந்திருந்த தங்கக்குண்டலங்களாட, அவரை எதிர்த்து ஓடினான். அப்பொழுது அவ்விடத்தில் அரக்கர்மன்னவனுக்கும் கழுகரசனுக்கும் இடையில் காற்றினால் துரக்கப்பட்ட மேகங்கள் ஒன்றோடொன்று மோதினாற்போலவும் இறக்கைகளுள்ள மாலியவந்தமலைகள் ஒன்றுடன் ஒன்று முட்டினாற்போலவும் பெரும்போர் நிகழ்ந்தது. இராவணன் தீக்ஷணமான நாளீகம், நாராசம், விகர்ணம் என்கிற பாணங்களை மழைபொழிவதுபோல அக்கழுகரசன்மேல் செலுத்தினான். ஜடாயு அவைகளைப பொறுத்துக்கொண்டு கூரிய நகங்களுள்ள தனது கால்களால் வெகுபலசாலியாகிய இராவணனுடைய தேகத்தில் பலவிடங்களில் காயம் பண்ணினார். அப்போது, மகாவீரியம் பொருந்திய தசக்கிரீவன் கோபங்கொண்டு கூர்மையுள்ளனவும் நேராகச் செல்வனவும் யமதண்டத்துக் கொப்பாயினவுமான பத்துப் பாணங்களைத் தனது வில்லில் சந்தித்துக் காதுவரையிலிழுத்து அக்கழுகரசனுடைய பிராணனை ஒழித்துவிட அவர்மேல் ஏவினான். அவர் அவ்வரக்கன் தேர்மேல் சீதை கண்ணீர்விட்டு அழுதுகொண் டிருப்பதைப் பார்த்து, அப்பாணங்களைக் கொஞ்சமேனும் லக்ஷ்யஞ் செய்யாமல், இராவணனை நோக்கி ஓடி, தன் கால்களால் முத்தும் மாணிக்கமும் இழைக்கப்பட்ட அவன் வில்லையும் பாணங்களையும் முறித்தெறிந்தார்.

அதன்பிறகு, இராவணன் வெகு கோபங்கொண்டு மற்றொருவில்லை எடுத்து நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும்பாணங்களைவருஷித்தான்.அப்பாணங்களால் மூடப்பட்ட புள்ளரசர் கூட்டிற்குள்ளிருக்கும் பக்ஷிபோல் விளங்கினார். அவர் அப்பாணங்களெல்லாவற்றையும் தமது சிறகுகளால் உதறிவிட்டுத் தமது கால்களால் மறுபடியும் அவன் பெரியவில்லை முறித்தார். அன்றியும் அக்கினி

போலப் பிரகாசிக்கும் அவன் கவசத்தை மகாவீரியம் பொருந்திய ஜடாயு தமது இறக்கைகளால் அடித்துத் துகளாக்கினார். பின்னர் அவர் தங்கப்பட்டயம் அணிந்தனவும் பேய்முகத்தையுடையனவும் வேகமுடையனவுமான அவனுடைய கழுதைகளை அடித்துக்கொன்றார். பின்பு இஷ்டப்படி சஞ்சரிப்பதும் நல்ல பாரையுடையதும் அக்கினிபோல் விளங்குவதும் இரத்தினம் இழைக்கப்பட்டதுமான அவனுடைய இரதத்தை முறித்தார். பின்னர்ப் பூரண சந்திரனுக்கொப்பான அவன் வெண்குடையையும் அவன் சாமரங்களையும் அவைகளைப் பிடித்திருந்த அரக்கர்களையும் ஜடாயு அடித்துக் கீழே தள்ளி, மூக்கினால் சாரதியின் தலையைக் கொத்தி எறிந்தார். இராவணன் வில் முறிந்து, இரதமழிந்து, இரதத்தில் கட்டிய குதிரைகள் மாண்டு, சாரதியும் செத்து, சீதையை மடியிலெடுத்துக்கொண்டு பூமியில்வந்துநின்றான். இராவணன் இரதமழிந்து பூமியில் நிற்பதைக் கண்டு பிராணிகளெல்லாம் "நன்று நன்று" என்று புள்ளரசனைப் புகழ்ந்தன. பக்ஷிராசன் கிழத்தன்மையால்கொஞ்சம் சோர்வடைந்ததை இராவணன் கண்டு, சந்தோஷமுற்று, சீதையை எடுத்துக்கொண்டு மறுபடியும் ஆகாயத்தில் கிளம்பினான். அவ்வாறு சந்தோஷமடைந்து இராவணன் சீதையை எடுத்துக்கொண்டு போவதை ஜடாயு கண்டு, பறந்து சென்று அவனைத் தடுத்து, "ஓ இராவணா, உன்னுடைய அன்பர்கள், பந்துக்கள், மந்திரிகள், சைநியங்கள், மற்றப் பரிவாரங்கள் எல்லாரும் நாசமடைதற்காகவே, தாகமெடுத்தவன் தண்ணீர் என்று விஷத்தைக் குடிப்பதுபோல், வஜ்ஜிராயுதத்துக் கொப்பான பாணங்களையுடைய இராமரது மனைவியை, நீ எடுத்துப்போகிறாய். தாம் செய்யுங்காரியத்தால் விளையும் பயனை அறியாதவர்கள் நாசமடைவதுபோல், வெகு சீக்கிரமாக நீ

ஜடாயு இராவணன் தேரை அழித்தது.

சாரதியைக் கொன்றது.

நாசமடைவாய். மாமிசத்தைக் கண்டு மயங்கித் தூண்டின்முள்ளை விழுங்கின மீனைப்போல், உன்னை யமனுடைய பாசம் சுற்றிக்கொண்டது! இனி நீ எவ்விடமோடித் தப்புவாய்? ஒருபொழுதும் வெல்லமுடியாத அவ்வரசகுமாரர்கள் அவர்களுடைய ஆச்சிரமத்தில் நீ நுழைந்ததைக் கொஞ்சமேனும் சகிக்கமாட்டார்கள். அன்றியும் நீ செய்தகாரியம் பயந்தவன் செயலாயிருக்கின்றது. எல்லாரும் நிந்திக்கும்படி நீ செய்த இந்தவேலை திருடருடைய தொழிலேயன்றிச் சூரர்கள் செயலன்று. நீ சூரனாகில் போர் செய். அல்லது கொஞ்சநேரம் நில். உனது தம்பியாகிய கரன் மாண்டதுபோல் நீயும் பூமியில் மாண்டுவிழுவாய். கெட்டுப்போகும் காலம் வந்தமையால்தான் நீ இக்கெட்ட தொழில்களைச் செய்தாய். இவை நாசமடைபவர்கள செய்யும் செயல்கள். பாபம்விளையும் செயல்களை யார் செய்வார்கள்? உலகாதிபதியாகிய பிரமதேவர்கூடச் செய்யமாட்டார்" என்றார். இவ்வாறு ஜடாயு சொல்லிவிட்டுத் தசக்கிரீவன் முதுகில் பறந்துவந்து விழுந்தார். யானைமேல் ஏறினவன் அதனுடைய துஷ்டத்தனத்தைப் போக்கடிக்க அதனை நடத்துவதுபோல் அப்புள்ளரசர் அவ்வரக்கன் தலைமயிரைப் பிடுங்கி முதுகை நகத்தாலும் மூக்காலும் சின்னபின்னமாகக் கிழிக்கத்தலைப்பட்டார். அவ்வாறு புள்ளரசரால் பிளக்கப்பட்ட இராவணன் கோபத்தால் உதடு துடித்து மெய் பதறி நின்றான். அவன் தனது இடது துடையில் சீதையை வைத்துக்கொண்டு வெகு கோபத்தோடு தனது கையால் ஜடாயுவை அறைந்தான். பகைவரேறாகிய ஜடாயு அவ்வடியைப் பட்டுக்கொண்டு தமது மூக்கால் அவனுடைய இடக்கை பத்தையும் துண்டித்தெறிந்தார். கைகள் அறுந்து கீழேவிழுந்தவுடனே அவற்றினிடத்தில், புற்றினின்று விஷப் பாம்புகள் எழும்புவதுபோல, வேறு கைகள் உடனே தோன்றின. அதன்

ஜடாயு இராவணன கைகளைத் துண்டித்தல்.

மேல் இராவணன் வெகு கோபங்கொண்டு சீதையைப் பூமி யில் விட்டுவிட்டுக் கைமுட்டியாலும் காலாலும் புள்ளரச ரைப் புடைத்தான். அப்போது மிக்க பலமுள்ள அவ்வரக் கர் மன்னவனுக்கும் எருவைகட் கரசனுக்கும் கொஞ்சநே ரம் பெருஞ் சண்டை விளைந்தது. இராமருக்காகத் தன்வலி யைக் காட்டத்தொடங்கின ஜடாயுவின் இரு சிறகுகளையும் கால்களையும் விலாக்களையும் இராவணன் வாளால் வெட் டினான். கொடிய அரக்கனால் அவ்வாறு சிறகுகள் வெட்டுண்ட புள்ளரசர் குற்று யிராகப் பூமியில் விழுந்தார். தேகமெல் லாம் இரத்தமோட ஜடாயு பூமியில் விழுந்ததைச் சீதை பார்த்து, அதிக துக்கங்கொண்டு, அவரைநாடிப் பந்துவைப் போல் துக்கத்துடன் ஓடினாள். கார்மேகம்போன்றவரும் வயதால் வெளுத்தவரும் பலசாலியுமாகிய புள்ளரசர், இலங்கை மன்னவனாகிய இராவணன் காண, அணைந்த காட்டுத்தீயைப்போலப் பூமியில் விழுந்தார். அப்போது சீதை இராவணனுடைய பலத்தால் மடிந்து பூமியில் விழு ந்த ஜடாயுவைக் கட்டிக்கொண்டு கோவென்று கதறினாள்.

ஜடாயு மாண்டது.

ஐம்பத்திரண்டாஞ் சருக்கம்.

ஜடாயு மாண்டபிறகு

இராவணன் சீதையை எடுத்துக்கொண்டு செல்லல்.

இராமருடைய ஆச்சிரமத்துக்கு அருகில் அவ்வாறு குற்றுயிராக ஜடாயு விழுந்ததை இராவணன் கண்டான். சந்திரன்போன்ற முகத்தையுடைய சீதை இராவணனால் வெட்டுண்டு அப்புள்ளரசர் மாண்டுவிழுந்ததைக் கண்டு வெகுவாகப் புலம்பினாள். பலசாலியான இராவணன் அவ் வாறு வதைத்த ஜடாயுவைச் சீதை கட்டிக்கொண்டு துக்

சீதை புலம்பல்.

கத்தால் புலம்பி "கண் துடித்தல், தோள் துடித்தல், கனவு, பறவைகளைக் காணல், பறவைகள் கூவுதல் முதலிய சகுனங்கள் மனிதர்களுக் குண்டாகும் நன்மை தீமைகளைத் தெரிவிக்கின்றன. ஓ இராமா, நீர் உமக்கு வந்திருக்கும் இப் பெருந் துக்கத்தை இன்னும் அறிந்துகொள்ளவில்லை. உமக்கு முன் அபசகுனமாகப் பறவைகளும் விலங்குகளும் சஞ்சரிக்கவும் அன்பினால் என்னைக் காப்பாற்றவந்த இப்பறவை மன்னன் எனது பாக்கியமின்மையால் வதையுண்டு பூமியில் கிடக்கின்றான். ஓ இராமா, ஓ லக்ஷ்மணா, என்னைக் காப்பாற்றுங்கள்" என்று சொல்லி அவ்வுத்தமியானவள் பயத்தால் நடுங்கிக்கொண்டு தனக்குச் சமீபத்திலிருப்பவர்களைக் கூப்பிடுவதுபோலத் தூரத்திலிருக்கும் இராமலக்ஷ்மணர்களைக் கூப்பிட்டுக் கதறினாள். அப்போது வாடின பூமாலை அணிந்து அநாதைபோலக் கதறும் சீதையிடம் இராவணன் ஓடிவந்து, அவ்வுத்தமி கொடியைப் போல ஒரு பெருமரத்தைக் கட்டிப்பிடிப்பதைப் பார்த்து "விட்டுவிடு" "விட்டுவிடு" என்று கூவினான். அக்காட்டில் இராமரைப்பாராமல் இராமா, இராமா, என்று கதறும் சீதையை யமனுக்கொப்பான இராவணன் சீக்கிரம் தன் பிராணனை இழக்கும்பொருட்டுக் கூந்தலில் பற்றினான்.

இராவணன் சீதையைக் கைப்பற்றல்.

அவ்வாறு, அக்கொடிய பாவி வைதேகியைப் பற்றினதும் இவ்வுலகத்திலிருந்த அசையும்பொருள் அசையாப்பொருள்கள் எல்லாம் மெய்ம்மறந்து போயின. பெரிய இருள்வந்து சகல பொருள்களையும் மூடிக்கொண்டது. காற்று வீசவில்லை. சூரியன் ஒளி இழந்தனன். பிரமதேவர் சீதை பிடிபட்டதைத் தமது திவ்ய ஞானத்தால் அறிந்து "நமது காரியம் ஆய்விட்டது" என்று சொன்னார். தண்டகாரணியத்தில் வசித்த பெரிய தவத்தோர்கள் சீதை பிடிபட்டதைக்கண்டு துக்கமும், இராவணனுக்கு முடிவு கிட்டி

விட்டதென்று சந்தோஷமும் ஒரேகாலத்தில் அடைந்தார்கள். இராமா, லக்ஷ்மணா என்று சீதை கதறிக்கொண்டிருக்க அரக்கர் மன்னவனாகிய இராவணன் அவளைத் தூக்கிக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் சென்றான். பொன்னாபரணமணிந்து மஞ்சட் பட்டுடுத்திருந்த தங்கநிறமான சீதை அப்பொழுது மிகவும் அழகாக மின்னல்போல் விளங்கினாள். சீதை உடுத்திருந்த மஞ்சள்பட்டுக் கொடி போல் பறக்க இராவணன் ஒரு பெரியமலை தீப்பற்றினது போல் வெகு அழகாகத் தோன்றினான். வெகு உத்தமியான சீதை அணிந்திருந்த மணமுள்ள செந்நிறமான தாமரை யிதழ்கள் உதிர்ந்து இராவணன் உடலில் விழுந்தன. காற்றில் பறக்கின்ற அவளுடைய மஞ்சள் நிறமான பட்டுத்துணி சூரியனுடைய வெயிலாற் சிவந்த மேகம் போல்தோன்றிற்று. ஆகாயத்தில செல்லும் இராவணன் மடியிலிருந்த இராமரைப் பிரிந்த சீதையின் முகம், காம்பின்றியிருந்த தாமரைபோல, வாடியிருந்தது. நன்றாக வெளுத்து விளங்கும் அழகிய பற்களையும, அழகிய நெற்றியையும், கூந்தலையும் உடையதும், தாமரை மலரின் உள் நிறம்போன்ற நிறமுடையதும், லக்ஷணமு குறைவில்லாததும், பூரண சந்திரன் போன்றதும், உயர்ந்த மூக்கும் அழகிய உதடுமுடையதும், ஆகாசத்தில் செம்பொன் நிறமாகவிளங்குவதுமாகிய சீதையின் முகம் அழுகையினாலும் கண்ணீர் வடிதலினாலும் இராமரைவிட்டுப் பிரிந்திருக்கையினாலும் இராவணனால் பீடிக்கப்பட்டமையினாலும் ஆகாயத்தில் செல்லும் அவ்வரக்க மன்னவன் மடியில் பகலிலுதித்த சந்திரன்போல் சோபிக்கவில்லை. பொன்னிறமுள்ள அவ்வுத்தமி இராவணன் மடியில் யானையணிந்த பொன்மாலை போலவும் கார்மேகத்தின் மத்தியில் உள்ள மின்னற்கொடிபோலவும் தோன்றினாள். இளந் தளிர்போல் சிவந்த நிறமுள்ள சீதை

இராவணன் சீதையைக் கையிலெடுத்துச் செல்லும் தோற்றம்.

யானையின்மேல் கட்டப்பட்ட தங்கக் குழல்போல் இராவ்ணன் மடியில் விளங்கினாள். அவளுடைய ஆபரணங்களின் சப்தத்தால் இராவணன் ஆகாயத்தில் செல்லும் முழங்குகின்ற கரிய மேகம்போல விளங்கினான். அவன் சீதையைக் கொண்டுபோகும்பொழுது அவள் தலையிலிருந்து புஷ்பங்கள் உதிர்ந்து நான்கு பக்கங்களிலும் விழுந்தன. அப்போது இராவணன் தேகத்தின்மேல் விழுந்த புஷ்பங்கள் மேருமலையைச் சுற்றியுள்ள நக்ஷத்திரங்கள்போல விளங்கின. நல்லமணிக ளிழைக்கப்பட்ட சிலம்புகள் வைதேகியின் காலினின்றும் கழன்று மின்னற்கொடிபோல் பூமியில் விழுந்தன. குபேரனுடைய தம்பியான தசமுகன் சீதையைத் தூக்கிக்கொண்டு செல்ல, பெரிய நக்ஷத்திரம்போலும் அவளது பெருங்காந்தியால் விண்முழுதும் விளக்கமடைந்தது. அவள் உடலிலிருந்து நழுவிப் பூமியில் விழும் நெருப்புப்போன்ற பொன்னாபரணங்கள் தமது புண்ணியங் குன்றிப் பூமியிலுதிரும் நக்ஷத்திரங்கள்போல விளங்கின. சந்திரன்போல விளங்கும் முத்துமாலை அவள் மார்பிலிருந்து விழுவது ஆகாயத்திலிருந்து பூமியிலிறங்கிய கங்கைபோலச் சோபித்தது. இராவணன் செல்லும் வேகத்தால் வழியிலிருந்த மரங்கள் அலைந்து அவைகளிலிருந்த பறவைகளெல்லாம் ஒலித்தது "பயபட-வேண்டாம்" என்று சீதைக்குத் தைரியம் சொன்னதை ஒத்திருந்தது. மலர்கள் அலைந்து வாட மீன்கள் ஓடுகின்ற தாமரை ஓடைகள் தங்கள் தோழியாகிய சீதைக்கு நேர்ந்ததைக் கண்டு பரிதபிப்பன போன்றன. சீதையின் நிழலைத் தொடர்ந்துகொண்டு சிங்கங்களும், புலிகளும், மற்ற விலங்குகளும், பக்ஷிகளும், நாலு பக்கங்களிலிருந்தும் வெகு கோபத்துடன் ஓடின. அருவிகளாகிய கண்ணீரை ஒழுக்கிச் சிகரங்களாகிய கைகளை மேலே தூக்கிக்கொண்டு பெருமலைகளும் எடுத்துக்கொண்டு

சராசரம் அடைந்த துயரம்.

போகப்படுகின்ற சீதைக்காகப் பரிதபிப்பன போலத் தோன்றின. அபகரிக்கப்பட்டுப் போகும் சீதையைக் கண்டு சூரியனும் தனது இயல்பான காந்தியை யிழந்து வெளுத்துத் தோன்றினன். "இராமருடைய மனைவியாகிய சீதையை இராவணன் தூக்கிப்போவதானால் இவ்வுலகத்தில் தருமமில்லை. உண்மை ஏது? நன்மையும் இல்லை. தயையும் இல்லை" என்று பிராணிகள் எல்லாம் கூட்டங் கூட்டமாய்க் கூடிப் புலம்பின. மான்குட்டிகள் பயமடைந்து வாடினமுகத்தோ டழுதன. வனதேவதைகள் பயமடைந்த தங்கள் கண்களை அடிக்கடி உயர எடுத்துப் பார்த்து நடுக்கமடைந்தார்கள். சீதை அடிக்கடி பூமியைப் பார்த்துக்கொண்டு கூந்தல் சோரத் திலகமழிய "இராமா, லக்ஷ்மணா" என்று கதறிக்கொண்டு போயினள். தனது நாசத்தின்பொருட்டு இராவணன் சீதையை அவ்வாறு தூக்கிக்கொண்டு செல்ல, வெள்ளிய மூரலையுடைய சீதை பந்து ஜனங்களை விட்டுப்பிரிந்து இராமரையும் லக்ஷ்மணரையும் காணுமல் துக்கத்தில் மூழ்கி முகம் வெளுத்தாள்.

ஐம்பத்துமூன்றுஞ் சருக்கம்.

சீதை இராவணனை நிந்தித்தல்.

சீதை தன்னைத் தூக்கிக்கொண்டு ஆகாய மார்க்கமாகப் போகிற இராவணனைப் பார்த்துத் துயருற்று மிகவும் மனங்கலங்கிப் பெரும் பயமடைந்தாள். அவ்வாறு கொண்டுபோகப்படும்போது சீதை மிகவும் பரிதாபமாக அழுது, தனது கண்களில் கோபமும், அழுகையும், அச்சமும் புலப்படத் தறுகண்ணனாகிய இராவணனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினள்:—"அடா இராவணா, அற்பனே, நான் தனியாக இருப்பதை அறிந்து என்

சீதை இராவணனை நிந்தித்தல். ௧

னைத் தூக்கிக்கொண்டு போகிறாயே! உனக்கு வெட்கம் இல்லையா? கொடியவனாகிய நீதான் என்னைக் கவர்ந்து கொண்டுபோகக்கருதி உன்னுடைய மாயையின் வலியால் ஒரு மானுருவங்கொண்டு என் கணவனை என்னைவிட்டுப் பிரித்து வெகுதூரம் போகச்செய்தாய். என்னைக் காப்பாற்றவந்த எனது மாமனாருடையதோழரும் பெரியவருமாகிய கழுகரசரும் உன்னால் கொல்லப்பட்டார். இராக்கதப் பதரே, உன் வலிமை மிகவும் பெரிது! நான் இராவணன் என்று கூறி நேராக யுத்தத்தில் ஜெயிக்கமாட்டாமல் என்னைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டாயே! இந்த நிந்தையான காரியத்தைச் செய்துவிட்டு வெட்கம் இல்லாதிருக்கின்றாயே! ஒருவனுடைய மனைவியை அவனில்லாத சமயத்தில் அபகரிப்பதாகிய உன்னுடைய இந்தக் கொடிய இழிவான செய்கையை உலகமெங்கும் பெரியோர்கள் தூற்றுவார்கள். சற்றுமுன் நீ பேசின உனது பெருமையும் பராக்கிரமமும் நிந்திக்கத்தக்கன. சீ! உன்னுடைய இந்தச் சரித்திரம் உன் குலத்திற்கு என்றென்றைக்கும் இழிவாகும். நீ வெகு வேகமாய் ஓடுகின்றாயே! நான் என்ன செய்வேன்? கொஞ்சநேரம் தாமதிப்பாயானால் உயிருடன் நீ திரும்பவே மாட்டாய். அவ்விரு ராஜகுமாரர்களுடைய கண்களுக்கு நீ எதிர்ப்படுவாயானால் உனது சைநியங்கள் சூழ இருந்தபோதிலும் நீ ஒரு நாழிகை கூட உயிரோடிருக்கமாட்டாய். காட்டுத்தீயைப் பறவை பொறுக்க முடியாதவாறுபோல நீயும் அவர்களுடைய பாணங்கள் உன்மேல் தைப்பதைப் பொறுக்கமாட்டாய். ஆகையால், உனக்கு நன்மையைத் தேடிக்கொள்ளவேண்டின் நீ என்னை விட்டுவிடு. நீ என்னை விடாமற்போனால் என் கணவரும் தம்பியும் உன்னைத் தப்பாமல் கொன்று விடுவார்கள். எந்த எண்ணத்துடன் என்னைப் பலாத்காரமாகக் கொண்டுபோகிறையோ அந்த எண்ணம் வியர்த்தமாகத்தான்போய்விடுமென்று எண்ணிக்கொள். தேவருக்

கொப்பான என்கணவரைப் பாராமல் சத்துருவசத்தி லிருந்துகொண்டு என் பிராணனை நான் வைத்துக்கொண் டிருக்கமாட்டேன். சாகுங்காலத்தில் ஒருவனுக்கு எல் லாம் விபரீதமாகத் தோன்றுவதுபோல உனக்கும் எது பெருமை எது க்ஷேமம் என்பது தெரியவேயில்லை. காலங்கிட்டினவர்களுக்கு நன்மை சொன்னால் அது ஏற்க மாட்டாது. ஓ ராவணா, உனது கழுத்தில் காலபாசம் விழுந்துவிட்டது. இவ்வண்ணம் பயப்படும்படியா யிருக் கவும், நிசாசர, நீ பயப்படவில்லை. ஆகையால், மரங்களெல் லாம் தங்கமாக உன்கண்களுக்குத்தோற்றுகிறது நிச்சயம். இரத்தவெள்ளம் நிறைந்தோடும் பயங்கரமான வைதரிணி நதியையும், கத்திகளையே இலைகளாக உடைய பயங்கர மான காட்டையும், இருப்பு முட்களையும், பொன் மலர்களை யும், வைடூரியத்தாலான இலைகளையுமுடைய அனல்வீசிக் கொண்டிருக்கும் சான்மலி விருக்ஷத்தையும் நீ பார்க்கப் போகிறாய்.* விஷத்தைக் குடித்தவன் பிழைத்திருப் பது எவ்வாறு சிறிதும் முடியாதோ அதுபோல மகாத் துமாவாகிய இராமருக்கு இந்தக் குற்றம் செய்த நீ பிழைக்கவேமாட்டாய். அடா இராவணா, நீ யமனுடைய பாசத்தில் சிக்கிக்கொண்டாய். இனி நீ எங்கே சென் றாற்றான் என்ன? மகாத்துமாவாகிய இராமருக்குக் குற் றஞ்செய்த உனக்குப் புகலிடம் என்ன இருக்கிறது? தம து தம்பியின் துணைகூட இல்லாமல் தாமே தனிமையாய் நின்று ஒரு நிமிஷத்தில் பதினாலாயிரம் அரக்கர்களை யுத்தத்தில் மாய்த்தவரும் சகலவித ஆயுதப்பயிற்சியிலும் தேர்ந்தவரும் பலசாலியுமாகிய இராகவர், தமது மனைவி யைத் தூக்கிக்கொண்டோடும் உன்னைக் கொல்லாது விடு வரா?" என்றும் இன்னு மநேகவிதமாகவும் இராவணன்

* நரகத்தில் பாவிகளுக்கு இம்மூன்றும் வெகு கொடிய தண்டனைக ளென்பது நம்மவர் கொள்கை.

மடியிற் கிடந்துகொண்டு சீதை பயத்தாலும் துக்கத்தாலும் மீதூரப்பட்டு வெகுபரிதாபமாகப் பிரலாபித்தாள். இவ்வாறு அதிக துக்கமடைந்து மிகவும் பரிதாபமாகப் புலம்பி அழுது மெய் நடுங்கித் தன்னை அவன் கையிலிருந்து விடுவிக்க முயன்றுகொண்டிருக்கும்பொழுதே சீதையை அப்பாவி எடுத்துக்கொண்டு போயினான்.

ஐம்பத்துநான்காஞ் சருக்கம்.

இராவணன்

சீதையை எடுத்துப்போய்த் தனது அந்தப்புரத்தில் வைத்தல்.

இராவணனே இவ்வாறு அவளைத் தூக்கிக்கொண்டு போகும்பொழுது தன்னைக் காப்பாற்றுவார் யாரையுங் காணாத சீதை ஒரு மலையின் சிகரத்தின்மேல் ஐந்து வானர வீரர்கள் நிற்கக் கண்டாள். அவர்கள் தன் விருத்தாந்தத்தை இராமருக்குச் சொல்லக் கூடும் என்று எண்ணி அவள் அவர்கள் மத்தியில் பொன்னிறம் பொருந்திய தனது மஞ்சள்பட்டு மேல்வஸ்திரத்தில் சில நகைகளை முடிந்து எறிந்தாள். அவள் அவ்வண்ணம் தனது துணியில் நகைகளை முடிந்து கீழே எறிந்ததை இராவணன் வேகமாகச் சென்றுகொண்டிருந்ததால் காணவில்லை. நெருப்புப்போன்ற கண்களையுடைய அவ்வானர வீரர்கள் அவ்வாறு அழுதுகொண்டு போகும் சீதையைக் கண் இமையாது நன்றாகப் பார்த்தார்கள். அரக்கர் குலாதிபன் பம்பா சரசைத் தாண்டி இலங்கையை நோக்கி, அழுதுகொண் டிருந்த சீதையை எடுத்துக்கொண்டு சென்றான். இராவணன் சீதையைக் கைப்பற்றினதால் மிகவும் சந்தோஷ மடைந்து கூர்மையான பற்களையு

டைய விஷப் பாம்பை எடுத்து மடிமேல் வைத்துக் கொள்வதுபோல அவளை மடியில் வைத்துக்கொண்டு சென்றான். வில்லிலிருந்து விடப்பட்ட பாணம் போல இராவணன் விரைவில் காடு, மலை, ஆறு, குளம் இவை களையெல்லாம் கடந்து சென்று என்றும் வற்றாததும், திமிங்கிலம்முதலிய கொடிய ஜலஜெந்துக்கள் உறைவதும், நதிகளெல்லாம் வந்து சேரப்பெறுவதுமான சமுத்திரத் தைத் தாண்டினான். அச்சமுத்திரமும் இராவணன் சீதையைக் கவர்ந்துகொண்டு வருவதனால் துக்கமடைந்து அலைகள் வீசாமலும் மீன்கள் முதலிய ஜலஜெந்துக்கள் ஓடப்பெறாமலும் இருந்தது. ஆகாயத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த சித்தர்களும் சாரணர்களும் "தசமுகா, இது வே உனக்கு முடிவு" என்று சொன்னார்கள். தனது நாசத் துக்குக் காரணமானவளும் தன்னிடமிருந்து தன்னை விடு விக்க முயல்பவளுமான சீதையை மடியில் எடுத்துக் கொண்டு இராவணன் இலங்கையை அடைந்தான். அவ் வாறு அவன் இலங்கை சேர்ந்து வெகு அழகாகவும் சிறப்பாகவும் அமைக்கப்பட்டு ஜனங்கள் நிரம்பி யிருந்த அநேக வீதிகளைத் தாண்டித் தனது அந்தப்புரத்தை அடைந்தான். அங்கே, இராவணன் சோகமும் மோக மும் கொண்டு கடைக்கண் கறுத்திருக்கும் சீதையை, மயன் அசுர மாயையைத் தனது அரண்மனையில் வைத் ததுபோல, வைத்தான். அதன்பிறகு, அவ்வரக்கன் சில பேய்முகமுடைய வெகு பயங்கரமான ராக்ஷசிகளைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்: "என்னுத்தரவில்லா மல் ஆணாவது பெண்ணாவது சீதையைப் பார்க்கக்கூடாது. பொன், முத்து, மாணிக்கம், ஆபரணம், ஆடைமுதலிய வைகளில் சீதை எப்போது எவைகளைக் கேட்கிறாளோ அவைகளை அப்போதே அவளுக்குக் கொடுக்கவேண்டும். தெரிந்தாவது தெரியாமலாவது சீதையைப் பார்த்து எவ ளாவது ஏதாவது கொடிய சொற்களைச் சொல்லுவாளா

ளுல் அவள் தன் உயிரை உடனே இழந்துவிடுவாள்". இவ்வாறு வெகு கீர்த்திபெற்ற இராவணன் ராக்ஷசிகளைப் பார்த்துக் கட்டளையிட்டுவிட்டு அந்தப்புரத்தை நீங்கி வெளியே சென்று இனிமேல் என்னசெய்யவேண்டும் என்று ஆலோசித்தான். அப்பொழுது பிசிதவூணராகிய மிக்க பலம் பொருந்திய எட்டு அரக்கர்களை அவன் கண்டான். அவர்களைக் கண்டதும் வெகுவல்லமை பொருந்திய இராவணன் தான் பெற்ற வரங்களால் தன்னை ஒருவரும் அசைக்கமுடியாதென்று நினைத்து அவர்களைக் கூப்பிட்டு, அவர்கள் பலத்தையும் வீரத்தையும் புகழ்ந்து அவர்களை நோக்கி "நீங்கள் எல்லாரும் இப்பொழுதே பல ஆயுதங்கள் எடுத்துக்கொண்டு இதற்கு முன் கரன் வசித்துவந்ததும், இப்பொழுது அவனுடன் மற்ற அரக்கர்களும் அழிந்ததால் பாழாகக் கிடக்கிறதுமான ஜனஸ்தானத்துக்குப் போய்ப் பயமென்பதைத் தூரத்தில் நீக்கிவிட்டு அங்கே வசியுங்கள். அவ்விடத்தில் நான் வைத்திருந்த பெரிய வல்லமையுள்ள ராக்ஷச சேனை கரதூஷணர்களுடன் ராமபாணங்களால் அழிந்துவிட்டது. ஆகையால், பொறுமையைமீறி எனக்கு ஒருகாலுமில்லாத கோபம் உண்டாயிருக்கிறது. அன்றியும் அவ்விராமனிடம் நான் மிக்க கொடுமையான பகைமை பாராட்டுகின்றேன். அவனிடத்தில் நான் பழிக்குப்பழி வாங்க விரும்புகிறேன். போரில் நான் அவனைக் கொல்லுகிறவரையில் எனக்குத் தூக்கம் வரமாட்டாது. கரனையும் தூஷணனையுங் கொன்ற அவ்விராமனைச் சீக்கிரம் கொன்று, தனமில்லாதவன் பெரும்புதையலை அடைந்தாற்போலக்களிப்படைவேன். நீங்கள் ஜனஸ்தானத்திலிருந்துகொண்டு இராமனுடைய செயல்களை எல்லாம் நன்றாய் அறியவேண்டும். நீங்கள் எல்லாரும் வெகு ஜாக்கிரதையாகச் சென்று இராமனைக் கொல்வதற்கு இடைவிடாதுமுயலுங்கள். நான் உங்களுடைய வல்

லமையைப் போர்முகத்தில் பலதடவைகளில் கண்டிருக்கிறேன்; ஆகையாற்றான், ஜனஸ்தானத்துக்கு உங்களை அனுப்புகிறேன்" என்று கட்டளையிட்டான்.

இவ்விதமான இனிய பொருள்பொதிந்த வாசகங்களைக் கேட்டு அவ்வரக்கர்கள் இராவணனை நமஸ்காரம் பண்ணி, எல்லாரும் ஒன்றுசேர்ந்து, ஒருவரும் தங்களைக் காணாதபடி இலங்கையை நீங்கி ஜனஸ்தானத்தை நோக்கி அப்பொழுதே புறப்பட்டார்கள். இவ்விதமாக இராவணன் சீதையைக் கொண்டுவந்து தன் அரண்மனையில் வைத்ததற்காகச் சந்தோஷமடைந்ததன்றித் தனது புத்தியின்மையால் இராமருடைய கொடிய பகையைத் தேடிக்கொண்டதற்காகவும் களிப்படைந்தான்.

ஐம்பத்தைந்தாஞ் சருக்கம்.

இராவணன் சீதையைத் தனக்கு மனைவியாகும்படி வேண்டல்.

இவ்வாறு, பயங்கரமான பராக்கிரமமுள்ள அரக்கர்கள் எண்மரைக் கட்டளையிட்டு அனுப்பியபின் இராவணன் தான் செய்யவேண்டியவைகளெல்லாவற்றையும் செய்துவிட்டதாகத் தனது புத்தியின்மையால் நினைத்துக் கொண்டான். பின்பு அவன் காமபாணத்தால் மிக வருந்திச் சீதையைப்பற்றி இடைவிடாது சிந்தித்துக்கொண்டு அவளைப் பார்க்கும்பொருட்டுத் தனது அழகான அரண்மனையில் வெகு வேகமாகப் புகுந்தான். அவன் அங்கு நுழைந்து, ராக்ஷஸிகளின் நடுவில் சீதை மிக்க துயரத்தால் வருந்திக் கண்ணீர் ஓடுகின்ற முகத்துடன், பெருங்கடல் நடுவில் காற்றால் அடிபட்டு முழுகுகின்ற கப்பல்போலவும், தனது இனத்தைவிட்டுப் பிரிந்து வேட்

இராவணன் சீதையைக் காணச் செலலல்.

டைநாய்களால் சூழப்பட்டு நிற்கும் பெண்மான் போலவும், இருப்பதைக் கண்டான். துயரத்தால் தீனமாய்த் தலை குனிந்திருக்கும் சீதையை இராவணன் கிட்டி, தேவர்கள் மாளிகைக் கொப்பானதும், ஆயிரம் மாதர்கள் வசிப்பதும், அநேக பக்ஷிக்கூட்டங்கள் நிரம்பியதும், அநேகவித மணிகளிழைக்கப்பட்டதும், தந்தம், பொன், படிகம், வெள்ளி முதலியவைகளால் செய்யப்பட்டு வயிரமும் வைடூரியமும் பதிக்கப்பட்ட தூண்களையுடையதும், வெகு அழகான மாடங்களையுடையதும், மங்களவாத்தியங்கள் ஒலிப்பதும், சித்திரக் கோபுரவாயில்களை யுடையதுமான தனது மாளிகையை அவளுக்குப் பலாத்காரமாகக் காட்டினான். அன்றியும், அவளுடன் தங்கத்தா லியற்றப்பட்டு வெகு அழகாக விளங்கும் தனது மாடிபடியில் இராவணன் ஏறினான். அம்மாளிகையிலுள்ள பலகணிகள் தந்தத்தாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டுப் பொன் புனைந்த வலைகளால் மூடப்பட்டிருந்தன. தரை மாணிக்கக் கற்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இராவணன் இப்படிப்பட்ட தனது மாளிகை முழுதையும் சோகத்தால் தபித்துக்கொண்டிருந்த சீதைக்குக் காண்பித்தான். பின்னர் வைதேகிக்கு அவன் தனது அரண்மனையிலிருந்த அநேக நீர்நிலைகளையும், தாமரைத்தடாகங்களையும், பலவித விருக்ஷங்களையும் காட்டினான். இவ்வாறு, எல்லாவற்றையும் அவளுக்கு அப்பாதகன் காண்பித்து அவளுடைய மனத்தை வசப்படுத்தும்பொருட்டுச் சொல்லலுற்றான்: "சீதாய், கிழவர்களையும் குழந்தைகளையும் ஒழித்து முப்பத்திரண்டுகோடி கோரமான அரக்கர்களுக்கு நான் தலைவன். எனக்கு ஒருகாரியம் செய்வதற்கு ஆயிரம் அரக்கர்கள் முன்வருவார்கள். இத்தன்மைத்தாகிய எனது அதிகாரமும் எனது உயிரும் உன்னுடைய வாயின. என்னுயிரினும் நீ

இராவணன் சீதைக்குத் தன் மாளிகை காட்டல்.

இராவணன் சீதையைத் தனக்கு மனைவியாகும்படி வேண்டல்.

எனக்கு அரியை. இங்குள்ள உத்தமிகளாகிய என் மனைவியர்கள் எல்லாருக்கும் நீ தலைவியாகு. காதலி, நீ என் மனைவியாகு. இது உனக்கு அழகு. வேறுவித யோசனை வேண்டாம். நான் சொல்லும் பேச்சைக்கேள். நான் உன்னாசையால் தவிக்கிறேன். என்மீது கருணைவைத்து என்னைச் சேர். நூறுயோசனை விஸ்தாரமுள்ள இந்த இலங்கை நான்குபக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருக்கிறது; இந்திரனோடுகூடிய தேவர்களாலும் எதிர்க்க முடியாதது. தேவர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், பன்னகர்கள் முதலியவர்களுள் எனக்கொப்பான பராக்கிரமமுள்ளவன் ஒருவனுமில்லை. தனது இராச்சியத்தை இழந்து தீனனாகித் தவசு செய்துகொண்டிருக்கும் அற்ப ஆயுளுடைய மானிடனாகிய இராமனால் உனக்கென்ன பயன்? ஆகையால், சீதாய், என்னிடத்து உன் மனத்தை வை. நான் உனக்கேற்ற நாயகன். மெல்லியலே, இளமை நிலையாது. ஆதலால் என்னை அணைவாய். சுந்தரி, இனி இராமனைக்காண எண்ணாதே. அவன் இங்குவரவேண்டும் என்று எண்ணவும் வல்லனல்லன். வெகு வேகமாக ஆகாசத்தில் சஞ்சரிக்கும் காற்றைக் கயிறுகொண்டு கட்ட முடியுமா? கொழுந்துவிட்டெரியும் தீயைக் கையால் பிடிக்க முடியுமா? என்னால் காக்கப்படும் உன்னைத் தன் வலிமையால் எடுத்துப்போகிறவன் மூவுலகத்திலும் இல்லை. இலங்கையிலிருந்துகொண்டு இந்தப்பெரிய இராச்சியத்தை நீயே பரிபாலனம் பண்ணு. நானும், என்னைப்போன்றவர்களும், தேவர்களும், சராசரமும் எல்லாரும் உன்னடிமைகளே. நீ பட்டாபிஷேகம்செய்துகொண்டு என்னைச் சந்தோஷப் படுத்து. நீ முன் செய்திருந்த பாவங்கள் எல்லாம் உனது வனவாசத்துடன் தொலைந்துவிட்டன. இனி நீ செய்துள்ள புண்ணியத்தின் பலனை இவ்விடத்தில் அநு

இராவணன் சீதைக்குத் தனது இராச்சியத்தைக் கொடுப்பதாகச் சொலலல்.

பணி. இங்கே திவ்விய பரிமளமுள்ள நல்ல மாலைகளும் உயர்ந்த ஆபரணங்களும் உள்ளன. அவைகளை நீ என்னுடன் அனுபவி. மெல்லிடையாளே, என் தமையனை குபேரனுடைய புஷ்பகம் என்ற சூரியனுக் கொப்பான விமானத்தை நான் பலத்தால் அவனை வென்று அவனிடமிருந்து பறித்துக்கொண்டேன். விசாலமாயும் வெகு அழகாயுமிருக்கும் அவ்விமானத்தில் என்னுடன்கூட இருந்துகொண்டு விளையாடுவாயாக. சந்திரனுக் கொப்பாகவும் வெகு பரிசுத்தமாகவும் அழகாகவும் விளங்கும் உனது முகம், ஓ மாதே, இப்பொழுது நீ சோகத்தால் வருந்துகிறபடியால் வாடியிருக்கிறது." இவ்வாறு இராவணன் சொல்ல அவ்வுத்தமி சந்திரனுக் கொப்பான தனது முகத்தைத் தனது முன்றானையால் மூடிக்கொண்டு கண்ணீர் பெருக்கினாள். அவ்வாறு கவலையால் அழகு குன்றி, அலமந்து, ஆலோசனையில் ஆழ்ந்திருக்கும் சீதையை இராவணன் பார்த்து "ஓ வைதேகி, ஒருவர் செய்யவேண்டிய கடமைக்கு இடையூறாகிய நாணத்தையொழித்துவிடு. நம்மிருவர்களுடைய சேர்க்கையும் தெய்வசங்கற்பத்தாலானது. இதோ, உனது அழகான இருதாள்களையும் என் தலையால் வணங்குகிறேன். சீக்கிரமாக என்மேல் கருணைவை. நான் உனது அடிமை. என் காமத்தால் வருந்திச் சொன்ன இச்சொற்கள் பயனடையாது போகற்க. இராவணன் இதுவரையில் ஒரு பெண்ணையும் தலைவணங்கினதில்லை" என்று கூறினான். இவ்வாறு கூறித் தசமுகன் மரணகாலம் கிட்டிவிட்டபடியால் ஜனகமகாராஜன் புத்திரியாகிய மைதிலியைத் தனக்குரியவளாகவே எண்ணினான்.

இராவணன சீதை காலில விழல.

ஐம்பத்தாறுஞ் சருக்கம்.

சீதை இராவணனை நிந்தித்தல்.

இராவணன் சீதையைப்பார்த்து இவ்வாறு சொல்ல, அவள் துயரத்தால் தபித்துக்கொண்டிருந்தபோதிலும் அச்சமின்றி அவனுக்கும் *தனக்கும் இடையில் ஒரு துரும்பைப்போட்டு அவனுக்கு மறுமொழி கூறுவாளாயினள்:

சீதை தன் நாயகர் இராமரென்று கூறல்.

"தருமத்தின் வேலிபோன்றவரும் சத்தியசந்தரும் உலகத்தார் எல்லாராலும் அறியப்பட்டவருமாகிய தசரதர் என்றமன்னவர் ஒருவரிருந்தார். அவர் மைந்தர் இராகவர். தருமாத்துமாவாகிய இராகவருடைய பெயர் இம்மூவுலகங்களிலேயும் பரவி யிருக்கிறது. அவர் நீண்ட கைகளையுடையவர்; விசாலமானகண்களையுடையவர்; தெய்வம்போல்பவர். அவர்தான் என்கணவர். அவர் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தவர்; சிங்கத்தின்தோள்போன்ற தோள்களையுடையவர்; மிக்க புகழை உடையவர். அவரே தமது தம்பியாகிய லக்ஷ்மணருடன் உனது உயிரைவாங்கப்போகிறார். அவர்முன்பாக என்னை நீ எடுத்திருப்பாயானால் ஜனஸ்தானத்தில் நிகழ்ந்தபோரில்கரன் விழுந்ததுபோல நீயும் விழுந்துமடிந்திருப்பாய். நீ வெகுவாகப்புகழ்ந்த பயங்கரமான அரக்கர்கள் எல்லாரும் கருடன்முன் எதிர்ப்பட்ட பாம்புகள்போல் இராகவரைக் கண்டமாத்திரத்தில் நாசமடைவார்கள். கங்கைநதியின் அலைகள் அதன் கரையை அறுப்

---

* பதிவிரதைகள் பரபுருஷனிடம் தைரியமாய்ப் பேசக்கூடாத விஷயங்களைப் பேசும்பொழுது இப்படிச் செய்யவேண்டுமென்பது விதி.

இராவணனுக்கு முடிவு கிட்டிவிட்டதென்றல்.

பதுபோல அவர் வில்நாணிலிருந்து விடப்படும் பொன்புனைந்தபாணங்கள் உனது சரீரத்தை யறுத்து வீழ்த்தும். அடா இராவணா, அசுரர்களாலும் தேவர்களாலும் வெல்லமுடியாதவனுயினும் இராமருடைய பகையைச் சம்பாதித்துக்கொண்டமையின் நீ உய்யப்போகிறதில்லை. எஞ்சியுள்ள உன்னுடைய வாழ்நாளை இராமர் அழித்துவிடுவர். யாககம்பத்தில் கட்டப்பட்ட பசுவின் உயிர்போல உன்னுடைய உயிர்மீளாது. கோபத்தால் கொழுந்துவிட்டெரியும் கண்களால் இராமர் உன்னைப் பார்ப்பாராயின் நீ மன்மதனைப்போல உடனே எரிந்து நீறுவாய். சந்திரனை ஆகாயத்திலிருந்து தரையில் விழச்செய்யவும் அழிக்கவும் சமுத்திரத்தை வற்றக்குடிக்கவும் வல்ல இராமர் நிச்சயமாய்ச் சீதையை இங்கிருந்து விடுவிப்பார். உனது ஆயுள் மாய்ந்துவிட்டது. உனது லக்ஷ்மி உன்னைவிட்டு நீங்கி

இலங்கைக்கு அழிவுவந்ததென்றல.

விட்டாள்; உனது பலம் போய்விட்டது; உனது புலன்களும் குன்றிவிட்டன. உன் நிமித்தம் இலங்கை கைம்மைத் தன்மை அடையப்போகின்றது. என்னைப் பலாத்காரமாக எடுத்தோடிவந்த உனக்கு இந்தத் தீச்செயல் ஒருபோதும் நலந்தருவதாகாது. சிறந்த கீர்த்தியுடைய என்கணவர் தம் தம்பியோடு சிறிதும் பயமின்றித் தமது தோள் வலியினலே மனிதசஞ்சாரமற்ற தண்டகாரணியத்தில் வசிக்கிருர். அவர் சரமாரிபொழிந்து உனது செருக்கையும் ஆற்றலையும் வீரத்தையும் வரம்பு கடந்து நடக்கும் சுபாவத்தையும் அழித்துவிடுவார். காலனுல் உயிர்களுக்குக் கேடுவருவதை அறிந்துகொள்ளக்கூடும்; அப்போது காலனுடைய ஆஞ்ஞைக்குட்பட்டு மனிதர்கள் தாம்செய்யும் காரியம் இன்னதென்று அறியமாட்டார்கள். என்னை எடுத்துவந்தமையால் உனக்கு முடிவுகாலம் வந்துவிட்டது. அடா ராக்ஷசப்பதரே; நீ நாசமடைவதன்றி,

மற்ற அரக்கர்களும் உன் அந்தப்புரத்தில் வாழ்பவர்களும் நாசமடையப்போகிறார்கள். அந்தணர்கள் சூழ்ந்து யாகத்திரவியங்கள் நிறைந்து விளங்கும் யாகவேதிகையைச் சண்டாளன் தீண்ட முடியாதவாறுபோல எப்பொழுதும் தருமத்தையே கைக்கொண்ட இராமருடைய தருமபத்தினியும் பதிவிரதையுமான என்னை அரக்கர்களுள் பதரும் பாவியுமான நீ தொடமுடியாது. தாமரைப் புஷ்பங்கள் நிரம்பிய தாமரையோடையில் எப்பொழுதும் அரச அன்னத்துடன் விளையாடின பெண்ணன்னம் கோரைப்புல் நிரம்பிய சேற்றில் நீர்க்காக்கையைக கண்ணெடுத்துப் பார்க்குமா? உணர்ச்சியற்ற இந்தச் சரீரத்தை நீ கட்டினாலென்! அழித்தாலென்! அடா இராவணா, இந்தச் சரீரத்தையாவது உயிரையாவது காப்பாற்ற முயலேன். இவ்வுலகத்தில் உள்ளவர்கள் என்னை அபவாதம் சொல்வதற்கு இடம் கொடுக்க மாட்டேன்.'' சீதை இந்தக் கொடிய வாசகங்களைத் தன் கோபத்தினால் சொல்லிவிட்டு ஒன்றும் பேசாதிருந்தாள். மயிர்க்கூச் செறியும்படியான இவ் வன்மொழியை இராவணன்கேட்டுச் சீதையைநோக்கி ''அடியே சீதே, நான் சொல்லுவதைக் கேள். இன்னும் பன்னிரண்டு மாதங்களுக்குள் நீ என் கருத்துக்கிசையாவிடில் என் சமையற்காரர்கள என் காலையுணவுக்காக உன்னைத் துண்டம்செய்வார்கள்'' என்று அச்சந்தரும் இச்சொற்களைச் சொன்னான். சத்துருக்களை அழப்பண்ணும் இராவணன் இவ்விதமாக வெகு கோபங்கொண்டு சொல்லி அங்கிருந்த ராக்ஷசிகளைப்பார்த்து ''பயங்கரமான தோற்றமுள்ள ராக்ஷசிகளே, மாம்சத்தையும் இரத்தத்தையும் உணவாகக் கொண்டவர்களே, நீங்கள உடனே தானே இவள் செருக்கை அடக்குங்கள்'' என்று கூறினான். அவன் அப்படிச் சொல்லலும் அக்கொடிய அரக்கியர்கள் கூப்பிய கையுடன்

சீதை தான உயிரை விடுவேன் எனறல

இராவணன் சீதையை ராக்ஷசிகளிடம் ஒப்புவித்தல்.

சீதையை வந்து சூழ்ந்துகொண்டார்கள். வெகு பயங்கரமான முகத்தையுடைய இராவணன் இரண்டடி எடுத்து வைத்துப் பூமி பிளந்துவிடுவதுபோல நடந்து அவ்விராக்ஷசிகளைப்பார்த்து "சீதையை அசோகவனத்திற்குக் கொண்டுபோங்கள். அங்கே அவளைச்சூழ்ந்து பாதுகாத்துக்கொண்டு காட்டியானையை வசமாக்குவதுபோல ஒருகால் வெருட்டியும் ஒருகால் இன்சொற் சொல்லியும் அவளை மெதுவாக வசமாக்குங்கள்" என்றான். இவ்விதமாகக் கட்டளையிடப்பட்ட ராக்ஷசிகள் சீதையை அழைத்துக்கொண்டு, விரும்பிய பொருள்களைக் கொடுக்கும் விருக்ஷங்கள் செறிந்து, பல்வகை மலர்களும் கனிகளும் நிறைந்து, எக்காலத்திலும் தேன் மலிந்து, பறவைகள் நெருங்கி விளங்கிக்கொண்டிருக்கும் அசோகவனம் சென்றார்கள். ஜனக மகாராஜன் புத்திரியாகிய சீதை சோகத்தில் மூழ்கினவளாய், புலிகள் நடுவில் மான்போல, ராக்ஷசிகள் நடுவில் அகப்பட்டுக்கொண்டு, வலையில்பட்ட மான்போலத் துக்கத்தால் மிகுந்த பீடிக்கப்பட்டுச் சௌக்கியத்தை இழந்து, ராக்ஷசிகளுடைய கொடிய பார்வைகளைக்கண்டு பயந்து, தூக்கமின்றி, தனது காதல் நாயகரையும் லக்ஷ்மணரையும் நினைத்துக்கொண்டு, பயத்தாலும் சோகத்தாலும் மூர்ச்சையடைந்தாள்.

சீதையை அசோகவனத்தில் வைத்தல்.

ஐம்பத்தேழாஞ் சருக்கம்.

இராமர் மாரீசனைக் கொன்றுவிட்டுத் திரும்பி வருதல்.

மானுருவங்கொண்டு வந்தவனாகிய வேண்டிய உருவமெடுத்துத்திரியும் ராக்ஷச மாரீசனைக்கொன்றுவிட்டு இராமர் விரைந்து திரும்பிவந்தார். சீதையைப் பார்க்கவேண்டுமென்று அதிவேகமாக அவர் சென்றுகொண்டிருக்கையில், அவருக்குப் பின்புறத்தில் வெகு கோரமாக நரிகள்

ஊளையிட்டன. மயிர்க்கூச் செறியும்படியான அந்தப் பயங்கரமான சத்தத்தை இராமர் கேட்டுத் திடுக்கிட்டுப் பயந்தார்.—"ஐயோ! இப்படி நரிகள் ஊளையிடுவது நல்ல சகுனமன்று! அரக்கர்களுக் குணவாகாமல் சீதை க்ஷேமமாக விருப்பாளாக. மானுருவங்கொண்ட மாரீசன் என் குரலைத் தெரிந்துகொண்டு அதுமாதிரிக் கதறினதை லக்ஷ்மணன் கேட்டானேயானால் அவன் மைதிலியைத் தனியே விட்டுவிட்டு அவளால் ஏவப்பட்டு என்னை நோக்கிச் சீக்கிரம் வருவான். அரக்கர்கள் எல்லாரும் சீதையைக் கொன்றுவிட நிச்சயமாக விரும்புவார்கள். மாரீசன் பொன்மானுருவங்கொண்டு என்னை எனது ஆச்சிரமத்திலிருந்து வெகுதூரம் இழுத்துவந்து என் பாணங்கள் தைத்த மாத்திரத்தில் அரக்க ரூபங்கொண்டு "ஆ லக்ஷ்மணா, நான் கொல்லப்பட்டேன்" என்று கதறினான். நான் இல்லாமலிருக்கும்பொழுது சீதா லக்ஷ்மணர்களுக்கு க்ஷேமமுண்டாகுமா? ஜனஸ்தானம் நிமித்தமாக எனக்கு அரக்கர்களுடைய பகை ஏற்பட்டது. பயங்கரமான அபசகுனங்கள்பல எனக்குக்காணுகின்றன" என்று இவ்வாறு நரிகளுடைய கூவிளியைக்கேட்டு யோசித்துக்கொண்டு இராமர் தமது ஆச்சிரமத்துக்கு விரைந்துதிரும்பினார். அவர் மானுருவங்கொண்டு மாரீசன் தம்மை நெடுந்தூரம் இழுத்துச் சென்றதற்காக மனங்குலைந்து ஜனஸ்தானத்திற்கு மீண்டார். அவ்வாறு பரிதாபமடைந்த மகாத்துமாவாகிய இராமரைக்கிட்டி மிருகங்களும் பறவைகளும் இடப்புறத்தில் நின்று பயங்கரமாகச் சப்தித்தன.

இராமருக்கு அபசகுனம் தோன்றல்.

இராமர் லக்ஷ்மணரைக் காணல்.

மகா பயங்கரமான அபசகுனங்கள் நிகழாநிற்க இராமர் ஒளிகுன்றிய முகத்துடன் லக்ஷ்மணர் வருவதைக்கண்டார். வியசனத்தோடு லக்ஷ்மணர் இராமரை அடைந்து அவருடைய வியசனத்தையும் துக்கத்தையும் பார்த்துத்-

தாம் மேலும் வியசனமடைந்தார். அரக்கர்கள் வாழும் காட்டில் சீதையைத் தனியாக விட்டுவந்ததற்காக இராமர் லக்ஷ்மணரைக் குறை கூறினர். இராமர் மிகுந்த துக்கத்துடன் லக்ஷ்மணருடைய இடக்கையைப் பிடித்துக்கொண்டு மிக மெதுவாக "ஐயோ! லக்ஷ்மணா, நீ செய்தது பெருங்குற்றம். சீதையைத் தனியாக விட்டுவிட்டு நீ வந்தாயே! அவள் க்ஷேமமாக இருக்கிறளா? அவளை அரக்கர்கள் கொன்றிருப்பார்கள் அல்லது புசித்திருப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. வெகுவித அபசகுனங்கள் காணப்படுகின்றன. ஓ லக்ஷ்மணா, ஜனகருடைய புத்திரியாகிய சீதை பிழைத்து உயிருடனிருக்க நாம் காண்போமா? நரிகளும் மற்றைய மிருகங்களும் வெகு பயங்கரமாகக் கத்துகின்றன; பறவைகளெல்லாம் சூரியனிருக்கும் திசையைநோக்கிக் கூவுகின்றன; பேராற்றலுடையானே, அவ்விராஜகுமாரி க்ஷேமமாக இருக்கிறள் என்று நான் எண்ணவில்லை. இவ்வரக்கன் மானுருவங்கொண்டு என்னை வெகுதூரம் இழுத்துவந்து இறுதியில் என்னால வெகு சிரமப்பட்டுக் கொல்லப்பட்டான். அவன் மாண்டு விழும்பொழுது தனது அரக்க ரூபத்தை அடைந்தான். என் மனம் வறிதாகிச் சந்தோஷமின்றி யிருக்கின்றது. எனது இடக்கண் துடிக்கின்றது. ஓ லக்ஷ்மணா, சீதை நமது ஆச்சிரமத்திலில்லை; இது நிச்சயம். அவள் இறந்துவிட்டாள், அல்லது பிறரால் அபகரிக்கப்பட்டு விட்டாள், அல்லது வழியில் திரிகின்றாள்" என்று சொன்னார்.

இராமர் சீதையை நினைத்துப் புலம்பல்.

ஐம்பத்தெட்டாஞ் சருக்கம்.

இராமர் சீதை எங்கேயென்று லக்ஷ்மணரை விசாரித்தல்.

லக்ஷ்மணர் முகம்வாடிச் சந்தோஷமின்றிச் சீதை இல்லாமல் வந்ததைப் பார்த்துத் தருமாத்துமாவான

இராமர் "ஓ லக்ஷ்மணா, தண்டகாரணியத்துக்கு என்னைத் தொடர்ந்து வந்த அந்தச் சீதை எங்கே? அவளை விட்டு விட்டு நீ எங்கு வந்தாய்? இராச்சியத்தை இழந்து துன்பமடைந்து தண்டகாரணியத்தில் அலைந்து திரியும் எனக்கு என் துக்கத்தின்கண் துணையாயினாள் எங்கே? வீரா, அவள் இல்லாமல் நான் ஒருநொடிப்பொழுதும் உயிர் வாழேன். என் உயிர்த்துணையாகிய அமரமாதருக்கொப்பான அந்தச் சீதை எங்கே? உருக்கின தங்கத்துக்கொப்பான நிறமுடைய சீதையின்றி நான் இவ்வுலகத்தின் அரசல்ல தேவலோகத்தின் அரசும் வேண்டேன். என்னுயிரினுமரிய சீதை பிழைத்திருக்கின்றாளா? ஐயோ! நான் இக்காட்டில் வாழ்ந்தது பயனற்றுப்போகுமா? ஓ லக்ஷ்மணா, சீதையினிமித்தம் நான் உயிர்மாண்டு நீ அயோத்திக்குச் சென்றால் கைகேயி தன் காரியத்தை நிறைவேறிச் சந்தோஷமடைவாளே! கௌசலை, தனது குமாரனாகிய நான் மாண்டுவிடத் துறவிவேடம்பூண்டு, தனது குமாரனுக்கு இராச்சியத்தை முடிவுபெறப் பெற்றுக்கொண்ட கைகேயியினிடம் தாழ்ந்து நிற்கவேண்டுமே! சீதை உயிருடனிருப்பாளாயின் நான் என் ஆசிரமத்துக்கு வருவேன். ஓ லக்ஷ்மணா, அவ்வுத்தமி இறந்திருந்தால் நான் உயிரை விட்டுவிடுவேன். நான் ஆச்சிரமத்தில் புகும்பொழுது புன்னகையுடன் சீதை என்னிடம் வந்து பேசாவிடில் நான் மாண்டுவிடுவேன். ஓ லக்ஷ்மணா, சீதை பிழைத்திருக்கிறாளா இல்லையா? நீ சொல். உன்னுடைய அஜாக்கிரதையினால் அவளை யாராவது அரக்கர்கள் புசித்துவிட்டார்களா? மிகச் சிறியவளும் மெல்லியவளும் ஒருநாளும் துக்கமென்பதை அறியாதவளுமாகிய சீதை, யான் பிரிந்தகாரணத்தால் அழுகின்றாள் என்பது நிச்சயம். அந்தத் துஷ்டனான அரக்கன் பெருங்குரலால் "லக்ஷ்மணா" என்று கூப்பிட்டபொழுது நீயும் பயந்தனையோ? என்குரல் போன்ற அக்

இராமர் சீதையை நினைந்து புலம்பல்.

குரலைக்கேட்டுப் பயந்த சீதையால் ஏவப்பட்டு நீ என்னைப் பார்க்கச் சீக்கிரமாக வந்திருக்கிறாய் என்று எண்ணுகிறேன். சீதையைத் தனியே காட்டில் விட்டுவிட்டு வந்ததில் நீ எவ்வகையாலும் புத்தியீனமாய் நடந்துவிட்டாய். இதனால் கொடிய அரக்கர்களுக்குக் கெடுதல்செய்ய இடங் கொடுத்தாய். கரனை நாம் கொன்றுவிட்டமையால் மாம்சத்தைப் புசிக்கும் அரக்கர்கள் துக்கமுள்ளவர்களா யிருக்கிறார்கள். அக்கொடியவர்கள் இப்போது சந்தேகமின்றிச் சீதையைக் கொன்றிருப்பார்கள். ஆ! தெவ்வரை அடக்குந் திறலுடையானே, நான் விசனத்தில் மூழ்கிவிட்டேன். இப்பொழுது என்ன பண்ணப்போகிறேன். ஐயோ! இவ்வித அவஸ்தைகள் நான் படவேண்டுமென்பது என் விதி போலும்!" என்று இவ்வண்ணம உத்தமியான சீதையைப் பற்றிப் புலம்பிக்கொண்டே அதி வேகமாக லக்ஷ்மணருடன் ஜனஸ்தானத்துக்கு வந்து சேர்ந்தார். வாடின முகத்தையுடைய தமது தம்பியைக் கோபித்துக்கொண்டு, பசியாலும் தாகத்தாலும் வருந்தி, ஊக்கம் குன்றி, முகம் வெளுத்து, பெருமூச்சு விட்டுக்கொண்டு, இராமர் ஆச்சிரமத்தினுட் புகுந்து, அது வெறிதா யிருக்கக்கண்டார். அவ்வீரர் ஆச்சிரமத்துள் நுழைந்து சீதை விளையாடும் இடங்களுக்குச் சென்று "இது சீதை விளையாடு மிடமல்லவோ" என்று சொல்லி மயிர்க்கூச்செறிந்து துன்பத்தில் மூழ்கினார்.

ஐம்பத்தொன்பதாஞ் சருக்கம்.

சீதையைத் தனியாக விட்டுவந்த காரணத்தை லக்ஷ்மணர் இராமரிடம் கூறல்.

பின்பு ஆச்சிரமத்தை விட்டு வெளியே வந்து சிறிது நேரம் பொறுத்து இராகவர் துக்கத்தால் சுமித்திரை

குமாரனை நோக்கி "ஓ லக்ஷ்மணா, உன்னை நம்பி மைதிலியைக் காட்டில்விட்டிட்டு நான் போயிருக்க நீ அவளைத் தனியே விட்டுச் சென்றதென்ன? சீதையை விட்டிட்டு நீ மாத்திரம் வருவதைக் கண்டவுடன் என்மனம் பெருந்தவறு விளைந்ததென்று கருதி உண்மையாக வருத்தமடைந்தது. சீதையின்றி நீமாத்திரம் வருவதாகத் தூரத்தில் கண்டவுடனே எனது இடக்கண்ணும் இடதுதோளும் இருதயமும் துடித்தன" என்றார். இவ்வாறு இராமர் கேட்க, நல்ல லக்ஷணங்கள் பொருந்திய லக்ஷ்மணர் அதிக துக்கமடைந்தவராய், துக்கப்படும் இராமரைப் பார்த்து "நான் என்னிஷ்டப்படி சீதையைத் தனியாக விட்டிட்டு வரவில்லை. அவள் என்னை வெகு கடோரமாகக் கடிந்துபேசி ஏவினதால் நான் தங்களிடம் வந்தேன். "ஓ லக்ஷ்மணா, என்னைக்காப்பாற்று" என்று தாங்கள் கூவினாற்போன்ற சத்தம் அவள் காதில் விழுந்தது. அந்தப் பரிதாபமான சத்தத்தை மைதிலி கேட்டுத் தங்கண்மாட்டு வைத்த அன்பால் அழுது, பயத்தால் மீதூரப்பட்டு, என்னைப் பார்த்து "போ போ" என்று கட்டளையிட்டாள். இப்படியாக அவள் என்னைப் போ, போ, என்று பலதரம் ஏவ நான் அவளை நோக்கி, அவளை ஆற்றும்வண்ணம் "இராமர் மனத்தில் பயத்தை உண்டுபண்ணத்தக்க அரக்கனை நான் பார்க்கவில்லை. நீர் அழவேண்டாம். இந்தச் சத்தம் அவருடைய குரலன்று; அதுபோல வேறொருவரிட்டது. தேவர்களையும் காப்பாற்றத்தக்க வல்லமையுள்ள இராமர் பழிப்புக்கிடமான இழிந்த "என்னைக் காப்பாற்று" என்னுஞ் சொல்லைச் சொல்லுவாரா? யாரோ ஒருவன் ஏதோ ஒருகாரியத்தின் பொருட்டாக, எனது தமையனாருடைய குரலால் "லக்ஷ்மணா, என்னைக் காப்பாற்று, காப்பாற்று" என்று சொல்லி

இராமர் லக்ஷ்மணரை சீதையை ஏன் விட்டு வந்தாய் என்று வினவல.

லக்ஷ்மணர் நான் சீதை ஏவலினால் வந்தேன் எனல.